**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள், மூலக்*

கேள்வியையொட்டி துணைக் கேள்வியைக் கேட்டுவிட்டு உட்காருங்கள். மானியக் கோரிக்கையில் பேசுவதுபோன்று பேசிக்கொண்டே போகிறீர்கள். (குறுக்கீடு) துணைக் கேள்வியைக் கேட்டு, உட்காருங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** அதையும் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்திருந்தால், பொறியாளர்கள் ஆய்வு செய்து, அவற்றில் இனிமேல் குடியிருக்க இயலாது என்று ஒரு முடிவு எடுத்தால், அகற்றிவிட்டு புதிய குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படும். ஆனால், இப்பொழுது பழுது பார்த்தாலே போதும் என்ற முடிவிற்கு வாரியம் வந்துள்ளது. அதனால்தான் ஒரு பகுதிக்கு 46.24 இலட்சம் ரூபாயும், இன்னொரு பகுதிக்கு 15.86 இலட்சம் ரூபாயும் பழுது பார்ப்பதற்கு ஒதுக்கீடு செய்து பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கின்ற கருத்தை ஏற்று மீண்டும் அதை ஆய்வு செய்து, இடிக்கக்கூடிய சூழ்நிலை இருக்குமென்று தெரிந்தால், நிச்சயமாக அகற்றிவிட்டு அங்கு புதிய குடியிருப்புகள் கட்டித் தர அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. பழுது பார்க்கும் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டுடன் flooring மற்றும் bath room-களை நவீனப்படுத்துவதற்குத் தேவையான நிதியை ஒதுக்கி தற்காலத்திற்கு ஏற்றவாறு அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பராமரிப்புக்கு என்று ஒதுக்கப்படும் நிதியிலேயே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சோழவந்தான் தொகுதியில், சோழவந்தான், வாடிப்பட்டி, அலங்காநல்லூர் மற்றும் பாலமேடு ஆகிய நான்கு பேரூராட்சிகள் இருந்தாலும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய பசுமை வீடுகளையோ, தொகுப்பு வீடுகளையோ அங்கு வழங்கக்கூடிய நிலையில்லை. இருந்தாலும், அங்கு ஏழையெளிய மக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பேரூராட்சிகளில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித் தர ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக பேரூராட்சிகளில் அரசு ஊழியர்களுக்கோ, பொதுமக்களுக்கோ இப்பொழுது வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற நிலைமை இல்லை. ஏனென்றால், அரசு ஊழியர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றால், அந்தப் பேரூராட்சியில் அதிக அரசு அலுவலகங்கள் இருக்க வேண்டும். அதிக அரசு ஊழியர்கள் அங்கு பணிபுரிய வேண்டும். இப்பொழுது அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆறாவது சம்பளக் கமிஷனில் வீட்டு வாடகைப் படி அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அவர்கள் தனியார் வீட்டு வசதியையே விரும்புகிறார்கள். அதனால் பேரூராட்சிகளில், நகராட்சிகளில் வாரியத்தின் மூலமாக அரசு

ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டம் எதுவும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் பேரூராட்சியில் 25 ஆண்டு காலமாகப் பணிபுரிந்துவரும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக வீடுகள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன். அதேபோல, தருமபுரி மற்றும் அரூர் போன்ற பகுதிகளில் ஏற்கெனவே தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் வீட்டு மனை வாங்கியவர்கள், Sale Deed பெற்றவர்வர்களுக்குப் பட்டா வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கும், பெயர் மாற்றம் செய்துகொள்வதற்கும் அதற்கான சிறப்பு ஆணை ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிடுவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமானது. அதை ஆய்வு செய்து, பட்டா மாறுதல் செய்வதற்கும், Sale Deed கொடுத்தாலும் நிலப் பெயர் மாற்றம் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அதில் தாமதம் ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வில் இருக்கின்றது. கூடிய விரைவில் அவர்களுக்குப் பட்டா கொடுப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் அவர்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள்





மூன்றாவது முறையாக முதலமைச்சரான பிறகு, வீட்டு வசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சென்னையிலுள்ள பழுதடைந்திருக்கிற பழைய வீடுகளையெல்லாம் சரி செய்யும் பணி விரைவாக நடந்து கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் என்னுடைய தியாகராய நகர் தொகுதியில், பழுதடைந்துள்ள வீடுகளையும், குடிசை மாற்று வாரிய வீடுகளையும் இப்பொழுது சரி செய்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வருகை தந்து, அவற்றை ஆய்வு செய்து பழுதடைந்திருக்கிற பழைய வீடுகளை மாற்றி புதிய வீடுகளைக் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த வருடம் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக 17 இடங்களில் 1,739.81 கோடி ரூபாய் செலவில் 6,254 குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படுமென்று அறிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியில் இடமிருந்தால் அங்கே வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**34—**

### பகுதிநேர நியாய விலைக் கடை

***19585—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

உளுந்தூர்பேட்டை தொகுதி, சாராயமேடு கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உளுந்தூர்பேட்டை தொகுதியில் உள்ள அரசூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 80 குடும்ப அட்டைகளையுடைய சாராயமேடு பகுதியையும் சேர்த்து, 514 குடும்ப அட்டைகளுடன் 'கிராமம்' என்ற திருமுண்டீஸ்வரம் முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. புதிய பகுதிநேரக் கடை அமைக்கப்பட்ட பிறகு, தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையும், புதிதாகத் தொடங்கப்படும் பகுதிநேரக் கடையில் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையும் பூர்த்தியாகாததால், சாராயமேடு கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க தற்போது வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். எனது உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட, திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட சாராயமேடு கிராமத்தில் கிட்டத்தட்ட 92 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அதன் தாய்க் கடையாக இருக்கின்ற திருமுண்டீஸ்வரம் நியாய விலைக் கடையிலே 540 ரேஷன் கார்டுகள் இருக்கின்றன என்பது உண்மை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தாய்க் கடையில் 500 ரேஷன் கார்டுகளும், பகுதிநேரக் கடையில் 150 ரேஷன் கார்டுகளும் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரசாங்கம் விதித்திருக்கின்ற விதிமுறைகளைத் தளர்த்தி, பகுதிநேர நியாய விலைக் கடையை ஆரம்பிக்க முன்வர வேண்டும்.



2013 அக்டோபர் 28]

நான் கடந்த முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். அப்போதிருந்தே அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களெல்லாம் இதே கோரிக்கையை முன்வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, நீண்ட காலமாக சாராயமேடு கிராமத்திலிருந்து மக்கள், திருமுண்டீஸ்வரம் கிராமத்திற்கு 3 கிலோ மீட்டர் தூரம் சென்று பொருட்களை வாங்குகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விதிமுறைகளைத் தளர்த்தி, சாராயமேடு கிராமத்திலே ஒரு பகுதிநேரக் கடை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் சார்பாக இந்த நியாய விலைக் கடை நடத்தப்பட்டு வருகிறது. ஏறத்தாழ 5 முழுநேரக் கடைகளும், ஒரு பகுதிநேரக் கடையும் செயல்பட்டு வருகின்றன. இந்தச் சங்கம் தொடர்ந்து குவிந்த நஷ்டத்தில் இயங்கி வருகிறது. கடந்த 2011-2012 முடிய, 77 இலட்சம் ரூபாய் வரைக்கும் இச்சங்கம் நஷ்டத்தில் இயங்கி வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அமைந்த பிறகு, பொது விநியோகத் திட்டத்தின்மூலமாக குடும்ப அட்டைதாரர்களுக்குத் தங்கு தடையின்றி பொருட்கள் எல்லாம் சீராக, சிறப்பாகக் கொடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஒரு கடையை அமைக்கும்பட்சத்தில், அச்சங்கத்திற்குக் கூடுதலாகச் செலவினம் ஏற்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளுக்கிணங்க, அரசு அலுவலர்களிடம் தொடர்புகொண்டு, உரிய நடவடிக்கை எடுத்து, துறைரீதியாக அங்கே பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பிருக்கிறதா என்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

[2013 அக்டோபர் 28

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பகுதிநேரக் கடை ஆரம்பித்தால், அரசூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குக் கூடுதல் செலவினம் ஏற்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலேயிருக்கிற மக்கள், பகுதிநேரக் கடை செயல்படுவதற்குத் தேவையான இடத்தை இலவசமாகக் கொடுப்பதற்கும், தாய்க் கடையிலிருந்து பொருட்களைக் கொண்டு வந்து விற்பனை செய்வதற்கு ஆகும் போக்குவரத்துச் செலவையும் அவர்கள் ஏற்றுக்கொள்வதாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, அங்கே கட்டாயமாக ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழகத்தில் நல்ல பல திட்டங்களையெல்லாம் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழகத்திலேயிருக்கிற மக்களெல்லாம் போற்றுகின்ற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பாக ஆட்சிபுரிந்து வரும் வேளையிலே, என்னுடைய உளுந்தூர்பேட்டை தொகுதியிலே இதுபோன்று பகுதிநேரக் கடைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலேயிருக்கிற அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் உள்ள மக்கள் இதுபோன்ற பகுதிநேரக் கடைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், என்னுடைய உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட பகுதிகளைப் பார்த்தீர்களென்று சொன்னால், கிட்டத்தட்ட 15 இடங்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றிட, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் நான் மனு கொடுத்திருக்கிறேன். அதற்கான கருத்துருக்கள் எல்லாம் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வந்திருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் சிறப்புக் கவனம் செலுத்தி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, சட்ட திட்டங்களை, விதிமுறைகளையெல்லாம் தளர்த்தி, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கிற மக்கள் பயன்பெறும் வகையில், நீண்ட காலமாக இதுபோன்று பகுதிநேரக் கடைகள் நிறைய பகுதிகளில் வேண்டுமென்று வைக்கின்ற கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற வகையில், அனைத்துப் பகுதிகளிலும் பகுதிநேர நியாய விலைக் கடைகளை ஆரம்பிக்க வேண்டும். 100 கார்டுகள் இருந்தாலும், அந்தப் பகுதியிலே பகுதிநேர நியாய விலைக் கடையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



2013 அக்டோபர் 28]

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வமாக இருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி அமைந்த பிறகு, விழுப்புரம் மாவட்டத்தில் 30 பகுதிநேரக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரின் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 7 பகுதிநேர நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. தற்போது 14 கடைகள் திறப்பதற்கு மாவட்ட மண்டல இணைப் பதிவாளரிடமிருந்து முன்மொழிவு அனுப்பப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை விரைவாகப் பரிசீலிக்க முடியுமா என்று துறைரீதியாக ஆய்வு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். பொது விநியோகத் திட்டத்தை நடத்துகின்ற சங்கங்கள் சாதாரணமான சங்கங்கள். இந்தச் சங்கங்களுக்கு வருமானமே குறைவுதான். விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பது, அவர்களுக்கு மற்ற உதவிகள் செய்வது, அதிலிருந்து கிடைக்கும் குறைந்த வருவாயை வைத்துத்தான் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன. அதன்மூலமாகவே இந்த நியாய விலைக் கடைகள் நடத்தப்படுகின்றன. மேலும், மேலும் பகுதிநேர நியாய விலைக்

[2013 அக்டோபர் 28

கடைகளைத் தொடங்கிக்கொண்டே போகும்போது, பணியாளர் ஒருவர்தான் இரண்டு கடைகளுக்கும் செல்ல வேண்டியிருக்கிறது. வாரத்தில் இரண்டு நாட்கள் அல்லது மூன்று நாட்களுக்குத்தான் கடையைத் திறக்க முடியும். இதனால் பொருளை வாங்குபவர்களுக்கும், பொதுமக்களுக்கும்தான் சிரமம் ஏற்படுகிறது. இதில் மேலும் என்ன சிரமம் என்றால், கள ஆய்வுப் பணிகளின்போது அதிகாரிகளுக்கும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, இதுபோன்ற நிலைகளில் தவறு ஏற்படும் என்று துறைரீதியாக அரசு அலுவலர்கள் கருதுவதால், மாண்புமிகு உறுப்பினர் அவசியம் மற்றும் அவசரம் கருதி தொடங்க வேண்டுமென்று சொல்கின்றபொழுது, மாவட்ட ஆட்சித் தலைவரே அந்தப் பகுதியில் நியாய விலைக் கடையைத் திறக்க வேண்டுமென்று நினைப்பாரேயானால், சாதி மோதல், இன மோதல் அல்லது ஏதாவது சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை வரும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் நினைக்கும்பட்சத்தில், அவரே அந்த பகுதிநேர நியாய விலைக் கடையைத் (part-time shop) திறக்கலாம். இல்லாதபட்சத்தில், அக்கடையைத் திறப்பதற்கு உணவுத் துறை நுகர்வோர் ஆணையாளருக்கு அனுப்பும்பட்சத்தில், அவர்மூலமாகப் பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டு நகரில் கற்பகம்-I கடையில் 1,700 கார்டுகள் இருக்கின்றன. அதைத் தனியாகப் பிரித்து பேர்ணாம்பட்டு காலனி பகுதிக்கு கற்பகம்-I கடையைப் பிரித்து, ஒரு நியாய விலைக் கடை அமைக்கப்படுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். அதைப் பிரித்தால் 800 கார்டுகள் அந்தக் கடைக்கு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.



2013 அக்டோபர் 28]

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து நிச்சயமாக துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூடுதலாக ஒரு தகவல் என்னவென்றால், இந்தப் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டும் என்று எந்த இடத்தைச் சொல்கிறார்களோ, அதனுடைய சட்ட விதிகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும்; அந்த இடம் இலவசமாகக் கொடுக்கப்பட வேண்டும். கொண்டுபோகும் நுகர்வோர், பொருட்களுக்கான செலவை அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதும், வாரத்தில் 3 நாட்கள்தான் அந்தக் கடை திறக்கப்படும் என்பதும் விதி. எனவே, இதற்கு உட்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும். துறைரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**35—**

**புதிய பாலம்**

***26996—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் பாலக்கரையில் காவேரி ஆற்றின் குறுக்கே புதிய மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் பாலக்கரையில், காவேரி ஆற்றின் குறுக்கே புதியதாக மேம்பாலம் கட்டுவதற்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பாலம் கட்டும் பணிகள் தொடங்கப்படவுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

முற்பகல் 10-30

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தொகுதி, பழைய பாலக்கரை பகுதியிலுள்ள விக்கிரவாண்டி-தஞ்சாவூர் சாலை S.H.-8-ல் கி.மீ.123/10-ல் உள்ள காவேரி பாலம் 1880 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. 133 ஆண்டுகளைக் கடந்த மிகவும் பழமையான அந்தப் பாலம் பழுதடைந்ததால் 29-8-2012 அன்று முதல் போக்குவரத்து நிறுத்தப்பட்டு, 4 கிலோ மீட்டர் சுற்றி மேலக் காவேரி பாலம் வழியாகத் திருப்பி விடப்பட்டது. அருகிலுள்ள அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களுக்கும் மற்றும் நீலத்தநல்லூர், மதனத்தூர், கொள்ளிடம் பாலம் வழியாக சென்னைக்கும் வரக்கூடிய மிகவும் இன்றியமையாத பாலமாகும். கும்பகோணம் நகர் விரிவாக்கம் செய்யப்பட்டதனால் புதிய நகரத்திற்கும், பள்ளிகள், கல்லூரிகள், நீதிமன்றங்கள், மாவட்ட தலைமை மருத்துவமனை, தீயணைப்பு நிலையங்கள் உள்ளிட்ட அரசு அலுவலகங்களுக்குச் செல்வதற்கும் மிகவும் சிரமமாக உள்ளது. இதுகுறித்த துணை வினாவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுரையில், 5-2-2013 அன்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உறுதிமொழி கொடுத்தார்கள். உறுதிமொழிக் குழுவின் பரிந்துரைகளிலும் வரிசை எண் 20-ல் இதுகுறித்து உள்ளது. 23-10-2013 அன்று கவன ஈர்ப்புத் தீர்மானமும் கொடுத்துள்ளேன் என்பதை நினைவுகூர்ந்து, இந்தப் பாலத்தின் அவசர, அவசிய நிலையைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2013 அக்டோபர் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதையும், இதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்டம், கும்பகோணம் உட்கோட்டம் பராமரிப்பிலுள்ள விக்கிரவாண்டி, கும்பகோணம், தஞ்சாவூர் சாலையில் கிலோ மீட்டர் 123/10-ல் பழைய காவேரி ஆற்றுப் பாலம், பாலக்கரைப் பாலம் உள்ளது. இப்பாலம் பழுதடைந்ததைத் தொடர்ந்து போக்குவரத்திற்குத் தடை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பாலத்திற்கு மேற்புறத்திலுள்ள நகராட்சி பாலம் வழியாகவும், கீழ்ப்புறத்தில் கும்பகோணம் புறவழிச் சாலையில் உள்ள பாலத்தின் வழியாகவும், தங்கு தடையின்றி போக்குவரத்து நடைபெற்று வருகின்றது. உறுப்பினர் குறிப்பிடும் பாலம் பழுது நீக்கம் செய்ய இயலாத சூழ்நிலையில் உள்ளதால், அதே இடத்தில் 500 இலட்சம் ரூபாய் செலவில் புதிய பாலம் கட்டுவதற்கு நிருவாக ஒப்புதல் அரசால் வழங்கப்பட்டு, தற்போது பாலத்தின் வடிவமைப்பினை இறுதி செய்வதற்காக அது ஆய்வில் உள்ளது. விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் துவங்கப்பட உள்ளதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு கும்பகோணத்தில் நடைபெறவிருக்கின்ற மகாமக திருவிழாவிற்கு இலட்சக்கணக்கான பக்தர்கள் நுழைவு வாயிலான இந்தப் பாலத்தின் வழியாக வந்து பாலக்கரையிலுள்ள சக்கரப்பட்டி துறையில் நீராடுவார்கள். அதற்கு இந்தப் பாலத்தைப் பயன்படுத்துவார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

[2013 அக்டோபர் 28

இந்தப் பாலத்தை உடனடியாகக் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். குடந்தை புறவழிச் சாலையில் உள்ள தாராசுரம், பெரும்மாண்டி, கொரநாட்டுகருப்பூர், உள்ளூர், பலவந்தன்கட்டளை, சாக்கோட்டை போன்ற பகுதிகளில் பாலங்களின் வேலைகள் நிறைவு பெறும் நிலையில் உள்ளன. அதனைத் தொடர்ந்து, சாக்கோட்டை, வரதநல்லூர், கொற்கை, கும்பகுடியூர், சோழமாளிகை, தாராசுரம் பணியையும் தொடர்ந்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, விரைந்து பாலங்கள் கட்டுவதற்கு, அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதிக்குட்பட்ட குறுந்தங்கோடு பாலம் மிகவும் பழமை வாய்ந்ததும், பல ஆயிரக்கணக்கான மக்கள் பயன்படுத்தி வரக்கூடிய ஒரு குறுகிய பாலம் என்பதாலும் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் பயன்பெறுகின்ற வகையில் புதிய பாலத்தைக் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 2011-2012 ஆம் ஆண்டில் மட்டும் 65 புதிய பாலங்கள் கட்டுவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். அதேபோல், 2012-2013 ஆம் ஆண்டில் புதிதாக 121 பாலங்கள் கட்டுவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். நடப்பாண்டில் 2013-2014 ஆம் ஆண்டில் 125 பாலங்களுக்கு 256 கோடி ரூபாய் மதிப்பில் நபார்டு வங்கி



2013 அக்டோபர் 28]

உதவியுடன் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற பாலத்தை ஆய்வு செய்து, அடுத்த ஆண்டு, நபார்டு வங்கி உதவியுடன் கட்டுவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மயிலாடுதுறை தொகுதிக்குட்பட்ட மண்ணமந்தல், மணக்குடிக்கு இடையிலே காவேரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு ஸ்தல ஆய்வுகளை அதிகாரிகள் செய்து விட்டுப்போயிருக்கிறார்கள். விரைவில் அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு உடனடியாக அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு அரசு முயற்சிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

*முற்பகல் 10-35*

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதியில் அணைக்கரை, அருவிக்கரை என்ற இரண்டு கிராமச் சாலைகளை இணைத்து பரலையாற்றின் குறுக்கே புதிய மேம்பாலம் கட்டும் திட்டம் ஏற்கெனவே அரசின் பிரேரணையில் உள்ளது. இந்தப் பணியைத் துரிதப்படுத்தி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மேம்பாலம் கட்டித் தர மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2013 அக்டோபர் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதியிலே குறிப்பிட்டிருக்கிற பகுதியில் புதிய பாலம் கட்ட வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, அந்தப் பகுதியில் பாலம் கட்டுவதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் போக்குவரத்து நெருக்கடியைப் போக்குவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 130 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, இரண்டு பாலங்கள் கட்டுவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் ஏற்கெனவே துவங்கியிருக்கின்றன. அதேபோல, மதுரை மாநகரில் முனிச்சாலை-மதிச்சியத்தை இணைக்கக்கூடிய இடத்தில், வைகை ஆற்றில் ஒரு பாலம் கட்ட வேண்டுமென்பது நீண்டகாலமாக மதுரை மக்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. மதுரை மாநகராட்சி நிருவாகமும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு தமிழக அரசுக்குக் கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று முனிச்சாலை-மதிச்சியத்தை இணைக்கக்கூடிய இடத்தில் ஒரு புதிய பாலம் கட்டுவதற்கு முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியில் பாலம் கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். ஒவ்வோர் ஆண்டும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பாலங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.



2013 அக்டோபர் 28]

ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, நபார்டு வங்கி உதவியுடன் 2011-2012 ஆம் ஆண்டில் 65 பாலங்கள், 2012-2013 ஆம் ஆண்டில் 121 பாலங்கள், 2013-2014 ஆம் ஆண்டில் 125 பாலங்கள் கட்டுவதற்கு ஆணையிட்டு அந்தப் பணிகள் எல்லாம் நடைபெற இருக்கின்றன. இருந்தாலும், இருக்கின்ற நிதியைப் பொறுத்துதான் பாலங்கள் கட்டப்படும். ஏற்கெனவே இருந்த ஆட்சியாளர்களின் ஆட்சியில் இல்லாத அளவிற்கு, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலேதான், மூன்றாண்டுகால பொற்கால ஆட்சியிலேதான், அதிக அளவிலே பாலங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், மதுக்கரையிலே இருந்து வாளையாறு வரையிலும் தேசிய நெடுஞ்சாலையில் ஏறக்குறைய ஐந்துக்கும் மேற்பட்ட பாலங்களை இரண்டாண்டு காலமாகக் கட்டாததன் விளைவு கடந்த இரண்டு வருடங்களில் மட்டும் 200-க்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டு, அதனைத் தொடர்ந்து அந்தப் பகுதி மக்கள், பாலம் கட்ட வேண்டும் என்று கடந்த ஒரு மாதகாலமாகப் போராடி வருகிறார்கள். எனவே, தமிழ்நாடு அரசினுடைய நெடுஞ்சாலைத் துறை இதை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கவனத்திற்கு எடுத்துச் சென்று விரைந்து அந்தப் பாலங்களைக் கட்டி முடிப்பதற்கும், சாலைகளை விரைவாகப் போடுவதற்கும் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 அக்டோபர் 28

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற அந்தப் பாலங்கள் எல்லாம் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசிடம் இதைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் துறை மத்திய அரசுக்குச் சுட்டிக்காட்டி, விரைந்து அந்தப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

**திரு. ஆர்.என். கிட்டுசாமி:** தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுமுடி அருள்மிகு மதலீஸ்வர் ஆலயத்திற்கு பல்வேறு மாநிலங்களில் இருந்து பக்தர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, கொடுமுடியிலிருந்து காவேரி ஆற்றின் குறுக்கே நாமக்கல் மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் குளிக்கல்பாளையம் வரை காவேரி ஆற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தப் பகுதியில் வாங்கல் பாலம் காவேரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருக்கின்றது. அதற்குப் பக்கத்தில்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டுகின்றார்கள். எனவே, அருகிலேயே அந்தப் பாலம் அமைந்திருக்கின்ற காரணத்தாலும், தற்போது நிதி இல்லாத காரணத்தாலும் புதிய பாலம் கட்ட இயலவில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 அக்டோபர் 28]

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. பழனிசாமி அவர்கள்.

**திரு. கே.சி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், வாங்கல்-மோகனூர் இடையே காவேரி ஆற்றில் கட்டிக்கொண்டிருந்த மேம்பாலப் பணிகள் நிறுத்தப்பட்டிருப்பதற்கு என்ன காரணம்? எப்போது பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாங்கல் பாலப் பணிகள் தற்போது நிறுத்தப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, இப்பாலம் கடந்த கால அவர்களுடைய ஆட்சியிலே, டெண்டர் விடப்பட்ட பாலம். சரியான ஒப்பந்ததாரருக்கு டெண்டர் விடப்படாத காரணத்தினாலே, அந்த ஒப்பந்ததாரர் இடையிலே அந்த வேலையை நிறுத்திவிட்டார். பலமுறை வலியுறுத்தியும், அப்பணியை மேற்கொண்டு தொடர இயலாத காரணத்தினாலே அந்த டெண்டர் இப்போது இரத்து செய்யப்பட்டு, புதிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கின்றது. விரைந்து அந்தப் பாலப் பணிகள் நடைபெறுவதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, கடையால்மூடு பேரூராட்சியையும், பத்மநாபபுரம் தொகுதி, கல்குளம் தாலுகா, திற்பரப்பு பேரூராட்சியையும் இணைக்கும்விதமாக கோதையாறு ஆற்றின் குறுக்கே தெற்பக்கடவு ஊரில் புதிய உயர்மட்டப் பாலம் அமைக்கப்பட வேண்டும்.

[2013 அக்டோபர் 28

தற்போது இரு பேரூராட்சி மக்களும் 5 கி.மீ. தூரம் சுற்றி களியல் வழியாகச் செல்கின்றனர். இதனால் கால விரயம், எரிபொருள் விரயம், பண விரயம் ஏற்படுகின்றன. திற்பரப்பு அரசு தேவஸம் போர்டு உயர்நிலைப் பள்ளிக்கும், கடையால்மூடு அரசு தொடக்க மேல்நிலைப் பள்ளிக்கும் பரஸ்பரம் மாணவர்கள் சென்றுவர மிகவும் சிரமப்படுகின்றனர். ரூ.21 இலட்சம் செலவில் மேற்குறிப்பிட்ட இடத்தில் இரு சக்கர வாகனங்கள் சென்றுவரவும், மக்கள் கடந்து செல்லவும் நடைப்பாலம் கட்டப்பட்டு, 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாத வெள்ளப் பெருக்கில் அந்த நடைப்பாலம் அடித்துச் செல்லப்பட்டது. எனவே, பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகையால், அந்த இடத்தில் ஒரு புதிய உயர்மட்டப் பாலம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, ஒவ்வோராண்டும் மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோரின் கோரிக்கைகளை ஏற்று புதிய பாலங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோதையாற்றின் குறுக்கே ஓர் இணைப்புப் பாலம் வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு இதனை எடுத்துச் சென்று, ஆவன செய்யப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வியாசர்பாடி மேம்பாலப் பணியை விரைவுபடுத்தி முடிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தேன். மேம்பாலப்



2013 அக்டோபர் 28]

பணி முடிவடையாததால், அந்தப் பகுதியிலே, மிகக் கடுமையான போக்குவரத்து நெருக்கடி பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக, மழைக்காலத்தில் அந்தப் பாலம் வழியாகக் கடந்து செல்ல முடியவில்லை. வட சென்னையில் ஒரு பகுதியும், பெரம்பூர் பகுதியும் துண்டிக்கப்படுகிற ஒரு நிலைமை ஏற்படுகிறது. ஆனால், கடந்த சில மாதங்களாக, அந்தப் பால வேலை முழுமையாக நின்றுபோய் இருக்கிறது. ஆகவே, அடுத்த சில மாதங்களுக்குள்ளாக அந்தப் பாலப் பணியை நிறைவு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வியாசர்பாடி இரயில்வே மேம்பாலப் பணிகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நிலம் கையகப்படுத்தும் பிரச்சினை மற்றும் கழிவுநீர்க் குழாய்களை மாற்றியமைக்கும் பணியில் இப்பாலம் கட்டும் பணிகள் தாமதமடைந்திருக்கின்றன. இதை விரைந்து முடிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**36—**

### காற்று மாசு

***36185—திரு. பொன். ராஜா:**

*மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பொன்னேரி தொகுதி, புழுதிவாக்கம் கிராமம், செட்டிநாடு நிறுவனத்தின் நிலக்கரி சேமிப்புக் கிடங்கிலிருந்து லாரிகள்மூலம் நிலக்கரி கொண்டு செல்லும்பொழுது ஏற்படும் காற்று மாசினைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?*

[2013 அக்டோபர் 28

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி சட்டமன்றத் தொகுதி, பொன்னேரி தாலுகா, புழுதிவாக்கம் கிராமம் சர்வே எண் 143-ல் தி/ள். செட்டிநாடு இன்டர்நேஷனல் கோல் டெர்மினல் என்ற தனியார் நிறுவனம் ஆண்டுக்கு 8 மில்லியன் டன் நிலக்கரியைக் கையாளுதல், சேமித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டுவருகின்றது. சேமிப்புக் கிடங்கிலிருந்து லாரிகள்மூலம் நிலக்கரியை ஏற்றிக்கொண்டு செல்லும்போது காற்று மாசினைத் தடுக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பின்வரும் சில நிபந்தனைகளை விதித்துள்ளது: (1) அளவிற்கதிகமான லோடுகளை ஏற்றிச் செல்லக்கூடாது, (2) தார்பாலின் கொண்டு மூடப்பட்டு, கரித்துகள்கள் காற்றில் பறக்காத வண்ணம் கொண்டு செல்ல வேண்டும், (3) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் இந்நிறுவனத்தின் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணித்துவரும். நிபந்தனைகளை நிறுவனம் மீறும்பட்சத்தில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

**திரு. பொன். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். எனது பொன்னேரி தொகுதிக்குட்பட்ட புழுதிவாக்கம் கிராமத்தில், செட்டிநாடு நிறுவனத்தின் நிலக்கரி சேமிப்புக் கிடங்கிலிருந்து ஒரு நாளைக்கு சராசரியாக 950 லாரிகளில் நிலக்கரியை எடுத்துச் செல்கிறார்கள். ஒரு லாரியிலே எடுத்துச் செல்லவேண்டிய நிலக்கரியின் அளவு 16 டன்னிலிருந்து 17 டன்தான் இருக்கவேண்டும். ஆனால், இந்த லாரிகளிலே ஓவர் லோடாக 25 முதல் 30 டன்கள் ஏற்றிச் செல்கிறார்கள். அதேபோன்று தார்ப்பாய் கட்டாமல் லாரிகள் செல்வதால் வழியிலே இருக்கும் அந்தச்



2013 அக்டோபர் 28]

சாலை ஓரங்களிலே நிலக்கரி அதிகமாக சிந்திவிடுகிறது. இதன்காரணமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்குச் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகின்றது. இருப்பினும், இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாற்று வழியும் உண்டு. தற்போது எடுத்துச் செல்கின்ற அத்திப்பட்டு, வல்லூர், மீஞ்சூர் பேரூராட்சி, நாலூர் ஊராட்சி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், துணைக் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. பொன். ராஜா:** மேட்டுப்பாளையம் மற்றும் பொன்னேரி பேரூராட்சி வழியாக எடுத்துச் செல்லும்போது லாரிகளிலேயிருந்து அதிக அளவிலே நிலக்கரி கொட்டுவதால் அவற்றை மாற்று வழியில் கொண்டு செல்ல ஏற்பாடு செய்யும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரிகளில் நிலக்கரியை அதிக லோடுகள், அதாவது 17 டன்களுக்குப் பதிலாக 30 டன்கள் எடுத்துச் செல்வதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும், மாற்று வழிப் பாதையில் எடுத்துச் சென்றால் இந்தப் பாதிப்பு இருக்காது என்றும் குறிப்பிட்டார்கள். அதில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆய்வுகளை மேற்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, காற்றில் மாசு கட்டுப்படுத்துகின்ற கருவி ஒன்று நிறுவப்பட்டு, Care Air Centre மூலமாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தொடர்ந்து 24 மணி நேரமும் கண்காணிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 8 மில்லியன் டன் இறக்குவதனால், அதிகப்படியான லோடுகள் செல்வதனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, ஆய்ந்து, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.*

**திரு. பொன். ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாற்று வழியாக அத்திப்பட்டு, வல்லூர், நாப்பாளையம், மணலி, மணலி புறவழிச் சாலை, 200 அடி சாலையில், அதாவது அவுட்டர் ரிங் ரோடு சாலை வழியாக என்.எச்.-5 இலே சென்று கும்மிடிப்பூண்டி, ஆந்திரா மாநிலங்களுக்குக் கொண்டு சென்றால், இந்தச் சிரமத்தைத் தவிர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற, ஆந்திரா மாநிலத்திற்குக் கொண்டு செல்கின்ற அந்த மாற்று வழியினை, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருப்பின் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**37—**

## தடுப்பணை

***19761—திரு. வீ.பி. நாகைமாலி:**

*மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) கீழ்வேளூர் தொகுதி, சோழவித்தியாபுரம் ஊராட்சி, வெள்ளையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கீழ்வேளூர் தொகுதி, சோழவித்தியாபுரம் ஊராட்சியிலே வெள்ளையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் திட்டப் பணி துறையினுடைய ஆய்விலே உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

*முற்பகல் 10-50*

**திரு. வீ.பி. நாகைமாலி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, சோழவித்தியாபுரம் ஊராட்சியில் வெள்ளையாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டும் திட்டப் பணி அரசின் ஆய்வில் இருக்கிறது என்று கூறிய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, சோழவித்தியாபுரம் ஊராட்சியில் வெள்ளையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டினால் தண்ணீரைச் சேமித்து வைத்து குடிநீருக்கும், பாசனத்திற்கும், மக்களின் இதர பயன்பாட்டிற்கும் பயன்படுத்த முடியும். சோழவித்தியாபுரம் கிராமம் அல்லாமல் அதைச் சுற்றியுள்ள கருங்கண்ணி, மீனம்பண்ணலூர், பாலக்குறிச்சி, கடல்திடல்கரை, ஏர்வைக்காடு ஆகிய ஊராட்சிகளில் தடுப்பணையைப் பயன்படுத்தி அந்தப் பகுதிகளிலே நிலத்தடி நீராதாரத்தைப் பெருக்கவும், விவசாயத்திற்குப் பயன்படுத்தவும் முடியும். ஆகவே, இந்தத் தடுப்பணையை விரைந்து கட்டி அந்தப் பகுதி மக்களுக்குக் கொடுக்குமாறு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு, நன்றி தெரிவித்து, அமர்கிறேன், நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2013 அக்டோபர் 28

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். கீழ்வேளூர் தொகுதி, வெள்ளையாற்றின் குறுக்கே கட்டப்படுகின்ற தடுப்பணையின் திட்டப் பணிகள் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் விரைந்து தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு ஒன்றியம், மசிகம் ஊராட்சியிலுள்ள பாலாற்றில் 5 ராட்சதக் கிணறுகள் தோண்டப்பட்டு அதிலிருந்துதான் ஆம்பூர் நகருக்குக் குடிநீர் விநியோகம் செய்து வருகின்றார்கள். அதேபோன்று பேரணாம்பட்டு நகருக்கும் அந்தக் கிணற்றிலிருந்துதான் குடிநீர் விநியோகம் செய்து வருகின்றார்கள். இரண்டு ஆறுகள் கலக்கின்ற அந்த இடத்திலே ஒரு தடுப்பணை கட்டப்பட வேண்டுமென்று நீண்ட வருடங்களாக கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதற்கான திட்ட மதிப்பீடுகளும் தயார் செய்து அரசுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திட்ட மதிப்பீடுகளை ஆய்வு செய்து, உடனடியாக அந்தப் பகுதியிலே ஒரு தடுப்பணை கட்டுவதற்கு ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார் அவர்கள்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விருத்தாசலம் தொகுதியானது சுமார் 200



2013 அக்டோபர் 28]

கிராமங்களைக் கொண்ட பகுதியாகும். அங்குள்ள அனைத்து கிராம மக்களுக்கும் விவசாயமே முக்கியமான தொழிலாக உள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் மிக அருகிலே உள்ளதால், அவர்கள் நிலக்கரி எடுப்பதற்காக பல ராட்சதக் குழாய்கள்மூலம் அதிகப்படியான தண்ணீரை வெளியேற்றுகின்றார்கள். இதனால் 20 அடி, 30 அடியிலேயே தண்ணீர் கிடைத்துக் கொண்டிருந்த நிலை மாறி, தற்போது 200 அடி முதல் 400 அடி வரை இருந்தால் மட்டுமே ஓரளவுக்கு விவசாயத்திற்குத் தண்ணீர் கிடைக்கும் என்ற நிலை உள்ளது. எதிர்காலத்தில், அதாவது 10 வருட காலத்திற்காவது, விவசாயத்திற்குத் தண்ணீர் கிடைக்குமா என்ற அச்சத்தில் விவசாயிகள் உள்ளதால் விருத்தாசலம் பகுதியில் மணிமுத்தாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க வேண்டும் என்று விவசாயிகள் பல ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்துள்ளனர். ஆகையால் அதிக முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வாக, குறைந்தபட்சம் 5 இடங்களிலாவது தடுப்பணை ஏற்படுத்தி விவசாயிகளின் அச்சத்தையும், வேதனையையும் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அரசினுடைய ஆய்வில் உள்ளது. நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கோரையாற்றில் பொன்னுக்குண்டான் ஆறு பிரியுமிடத்தில், அந்த ஆறுவழியாகத்தான் பைங்காட்டூர், வாட்டார், நல்லூர், அக்கரைக்கோட்டை, ரெங்கநாதபுரம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள வயல்களுக்குத் தண்ணீர் செல்ல வேண்டும். இந்த ஆண்டு போதிய அளவு தண்ணீர் இருந்தும் ஆற்றின் கொள்ளளவுக்கு மேல் அதிகமாக தண்ணீர் கொடுத்தாலும்கூட வயல்களில் ஏறி பாய முடியாத அளவுக்கு ஆற்றினுடைய மட்டம் கீழே இருக்கிறது. அந்தவகையில், பொன்னுக்குண்டான் கோரையாற்றில் ஒரு ரெகுலேட்டர் கட்டிக் கொடுத்தால் அந்தப் பகுதியில்

[2013 அக்டோபர் 28

இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும். ஆகவே, அந்த வகையில் அங்கே ஒரு ரெகுலேட்டர் கட்டித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஆறுகள் பாசனம் பெறமுடியாத அளவுக்கு பள்ளமாக இருக்கின்ற காரணத்தால், ஆற்றின் மட்டம் மேடாக இருக்கிறது. ஆகையால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிற தரைமட்டப் பாலங்கள் இந்த ஆண்டு திருவாரூர் மாவட்டத்தில் தேவைக்கு ஏற்ப அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இப்பொழுது மத்திய அரசு நிதி உதவிக்காகச் சென்றிருக்கிறது. நிதியுதவி கிடைத்தவுடன் விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருக்கிற கெலவரப்பள்ளி அணையிலிருந்து, இடதுபுறக் கால்வாய் வழியாக வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதி, வரதாபுரம் ஏரி வரையிலே தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. வரதாபுரம் ஏரியிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரம் உள்ளது துரை ஏரி. துரை ஏரிக்குக்கீழே 1½ கிலோ மீட்டர் தூரமுள்ளது வேம்பள்ளி dam. இந்த இரண்டும் தண்ணீர் இல்லாமல் காய்ந்து போயிருக்கின்றன. கெலவரப்பள்ளி அணையிலிருந்து வரதாபுரம் வரையில் வரக்கூடிய கால்வாயை நீட்டித்துத் தருவதற்குண்டான முன்மொழிவுகள் எல்லாம் அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கால்வாயை நீட்டித்துத் தந்து, அந்தப் பகுதியிலே



2013 அக்டோபர் 28]

இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு நன்மையைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**38—**

### கால்நடை மருத்துவமனை

***22533—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியம், வெங்களூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர், காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியம், வெங்களூரிலே கால்நடை மருத்துவமனை அமைக்க கோரிக்கை வைத்திருக்கிறார்கள். வெங்களூரிலே கால்நடை பராமரிப்புத் துறையினுடைய விதிப்படி 3,000 கால்நடைகள் இருப்பதாலும், 3 கி.மீ. தொலைவு இருப்பதாலும் அங்கே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க

[2013 அக்டோபர் 28

மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மாவை மாதா பிதா குரு தெய்வம் என்ற நான்கையும் ஒருருவாய் இங்கே நாடு பார்க்கிறது. ஈரோட்டுப் புயல், காந்தித் தென்றல் இரண்டும் கலந்ததாய் ஈகையுடைய தாயை உலகம் பார்க்கிறது. பூக்களுக்கும் புன்னகை போதித்த புரட்சித் தலைவராக பொன்மனத் தாயை பூவுலகமே பார்க்கிறது. அல்லாடும் மக்களை அரவணைக்கும் அன்னை தெரசா வடிவில் அன்புலகம் பார்க்கிறது. மக்கள் பசி தீர்க்கின்ற மருத்துவராம் மாதரசியை அன்னலட்சுமி என்று அகிலமே பார்க்கிறது. 130 கோடி இந்தியரை நுண்ணறிவால், நுண்புலத்தால், பொன் மனத்தால் வழிநடத்த வருகை தரும் நுண்ணறிவுப் பெட்டகமே என ஆறறிவு மனித இனம் அறிவோடு பார்க்கிறது. தாய்நாட்டை வழிநடத்த தமிழர்க்கோர் வாய்ப்பு என்று தரணியே பார்க்கிறது. விழித்தெழு தமிழினமே, விடையிருக்கிறது தாயிடமே என்று கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்கும் முன்னே விடை தெரியும் என்பதைப்போல, இன்றைக்கு நான் கேட்ட கேள்விக்கு விடையாக அங்கே கால்நடை மருத்துவமனை அமைத்துத் தரப்படும் என்று கூறிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மேலும், தேவகோட்டை ஒன்றியம், கீழஉச்சாணி பகுதியில் அரசு விதிகளுக்குட்பட்டு 15,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. அந்தப் பகுதியிலிருந்து மக்கள் கால்நடை மருத்துவமனைக்குச் செல்லவேண்டுமென்றால், திருவெம்புத்தூர் 9 கி.மீ. தூரத்திலும், ஆலந்தூர் 7 கி.மீ. தூரத்திலும் இருக்கிறது. ஆகவே, அங்கேயும் ஒரு கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தித் தரவேண்டும். அதேபோல, 25,000 கால்நடைகளுக்கு மேலே சாக்கோட்டை ஒன்றியம், பையாவயல் பகுதியில் இருக்கின்றன. அங்குள்ள மக்கள் பயனடைய வேண்டுமென்றால் 9 கி.மீ. தூரமுள்ள திருக்கள்ளிக்காடு பகுதிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது.



2013 அக்டோபர் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைக் கேள்வி ஒன்று கேளுங்கள். இன்னொரு துணைக் கேள்வியும் கேட்கலாம். மூலக் கேள்வி நீங்கள்தானே கேட்டிருக்கிறீர்கள்?

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மேலும் இரண்டு இடங்களிலே மருத்துவமனை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற கிராமங்களிலெல்லாம் என்னுடைய துறை ஆய்வுசெய்து, தேவைப்படுமென்றால், கிளை மருத்துவமனைகள் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியம், விராலிக்காட்டில் 5,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. எனவே, அங்கே கால்நடை துணை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக்

[2013 அக்டோபர் 28

கிராமத்தில் கால்நடை பராமரிப்புத் துறை விதிகளுக்குட்பட்டு கால்நடைகளின் எண்ணிக்கை இருக்குமானால், நிச்சயமாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் மற்றும் திரு. ரா. சரத்குமார். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**39—**

**சரிகை ஆலையை சீரமைத்தல்**

*__5703—திரு. வி. சோமசுந்தரம்:__
**திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை ஆலையைச் சீரமைத்து, உற்பத்தியைப் பெருக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரத்தில் இயங்கும் சரிகை ஆலையைச் சீரமைத்து உற்பத்தியைப் பெருக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மாவினுடைய அரசால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சரிகை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன், மூலப்பொருட்களை ஒப்பந்தப்புள்ளிமூலம் கொள்முதல் செய்யும் கால அளவான 45 நாட்களுக்கு ஒரு முறை என்ற நடைமுறையை மாற்றி, 15 நாட்களுக்கு ஒரு முறை ஒப்பந்தப்புள்ளி கோரும் நடைமுறை செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் சரிகை உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் தடையின்றிக் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் விற்பனை யாவும் ஆலை வாயில் விலை திட்டத்தின்படி (Mill Gate Price Scheme) தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின்மூலம் பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுவதால், பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் இந்தத் திட்டத்தின்மூலம் 2.5 விழுக்காடு விலையில்



2013 அக்டோபர் 28]

மானியம் பெற்று வருகின்றன. காஞ்சிபுரம் சரிகை ஆலை உற்பத்திப் பிரிவில் முழுமையான சரிகை உற்பத்தியை எய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசால் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

**திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டை இந்தியா முற்றிலும் புறக்கணிக்க வேண்டுமென்கிற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை நிறைவேற்றிய (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவினுடைய இரும்புப் பெண்மணியாகத் திகழும், நாளைய பாரதத் திருநாட்டை வழி நடத்தப்போகும் எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். காஞ்சிபுரத்தில் இருக்கின்ற சரிகை ஆலையில் சரிகை உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைப்பதற்கும், சரிகை உற்பத்தியினை முழுமையாக எய்துவதற்கும் தேவையான நடவடிக்கையை எடுத்த, எங்களது தாய், நெசவாளர்களின் விடிவெள்ளியாகத் திகழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த ஆலை மிகவும் பழமையான ஆலையாக இருப்பதினால், ஒரு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து இந்த ஆலை புனரமைக்கப்படுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் என்ற இலட்சியத்தோடு செயல்படுகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு, மக்களைத் தேடி, மக்களின் தேவைகளை அறிந்து, மக்களுக்காகத் திட்டம் தீட்டி

[2013 அக்டோபர் 28

செயல்படுகின்ற அரசாக விளங்குகிறது. குடியிருக்க வீடு இல்லை என்கிற நிலையை அறிந்து நெசவாளர்கள் குடியிருக்கவும், குடியிருக்கும் வீடுகளில் நெசவுப் பட்டறை அமைக்கவும், 260 கோடி ரூபாயில் 10 ஆயிரம் விலையில்லா பசுமை வீடுகள் வழங்கியும், கைத்தறி நெசவாளர்களின் உற்பத்தியைப் பெருக்கிடவும், உற்பத்தியின்மூலம் அதிகக் கூலி கிடைக்கவும், 6,000 பெடல் தறிகள் ரூபாய் 24 கோடி விலையில் வழங்கியும், கைத்தறித் துறைக்கு சிட்டா நூல்கள் தங்கு தடையின்றிக் கிடைக்க, 25 ஆயிரம் மின் மோட்டார்கள் வழங்கியும், பட்டு உற்பத்தியை அதிகரிக்க Pneumatic Air Compressor உபகரணங்கள் வழங்கியும், நெசவாளர்களின் பொற்காலமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு செயல்படுகிறது. காஞ்சிபுரத்தில் பழமையான ஆலை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இன்றையதினம் பட்டுச் சேலையின் அழகினை மெருகூட்டுவதற்கு பார்டரில் சரிகை, புட்டாவில் சரிகை, முந்தியில் சரிகை, முகூர்த்தப் பட்டில் முழுவதுமாக சரிகை போன்று சரிகையினுடைய தேவையை அதிகப்படுத்துவதற்கு, நியாயமான முறையில், மக்களுக்கும், கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கும் கிடைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

**திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே வேறு எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நெசவாள மக்களுக்காக பல்வேறு திட்டங்களை வாரி வழங்கிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாகவும், நெசவாள மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.



2013 அக்டோபர் 28]

**40—**

## சொந்தக் கட்டடம்

***24060—திருமதி க. அழகுவேலு:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி நகராட்சியிலுள்ள வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கள்ளக்குறிச்சி நகராட்சியிலுள்ள வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

முற்பகல் 11-05

**திருமதி க. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம், தமிழகத்தின் காவல் தெய்வம், வருங்கால பாரதம், மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி, கேள்வி எழுப்பப்பட்டு அந்தக் கேள்வி இந்தச் சபைக்கு வரும் முன்னரே வணிக வரி அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட உத்தரவிட்டு, தற்போது கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வரம் கேட்கும் முன்னே வாரிக் கொடுக்கும் வள்ளலாக விளங்கிக்கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றியை என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, அமர்கின்றேன்.

[2013 அக்டோபர் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**41—**

**தரம் உயர்த்துதல்**

***23952—திருமதி செல்வி ராமஜெயம்:**

*மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புவனகிரி தொகுதி, அழிச்சிக்குடி ஊராட்சி, வண்டுராயன்பட்டிலுள்ள ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, அழிச்சிக்குடி ஊராட்சிக்குட்பட்ட வண்டுராயன்பட்டிலுள்ள அரசு ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளி, 2013-2014 ஆம் கல்வி ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாக, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று தரம் உயர்த்தப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**திருமதி செல்வி ராமஜெயம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழகத்தை கண்ணை இமை காப்பதுபோல் காத்து, தமிழக மக்களின் வாழ்வொன்றே தன்னுடைய வாழ்நாளின் இலட்சியமாகக் கருதி, வருங்கால பாரதமாக விளங்கிக்கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும்*



2013 அக்டோபர் 28]

*திசை நோக்கி வணங்குகிறேன். வண்டுராயன்பட்டு, அழிச்சிக்குடி ஊராட்சி ஆதி திராவிட சமுதாய மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதியாக உள்ள காரணத்தினால், அந்தப் பகுதிவாழ் மக்களின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படும் என்று சொன்ன மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சிக்கு என்னுடைய தொகுதிவாழ் மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**42—**

**பேருந்து வசதி**

***6768—திரு. டி. சுரேஷ்குமார்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கம் தொகுதி, ஆதிப்பாடி மற்றும் செம்மம்பட்டி கிராமங்களுக்குப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி, ஆதிப்பாடி கிராமம், புறநகர் தடம் 122 E/Q மூலம் சென்னை-ஆதிப்பாடி-தானிப்பாடி வழித்தடத்தில் இரண்டு நடைகளும் மற்றும் தானிப்பாடி-ஆதிப்பாடி வழித்தடத்தில் ஒரு சிற்றுந்துமூலம் தினசரி 14 நடைகளும் நேரடிப் பேருந்து வசதி பெற்றுள்ளது. புறநகர் தடம் 313 திருவண்ணாமலை பீமாரப்பட்டி வழி தானிப்பாடி வழித் தடத்தில் தினசரி 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. செம்மம்பட்டி கிராமத்திற்கு பீமாரப்பட்டிலிருந்து செல்லும் சாலை மிகவும் குறுகலான மண் சாலை ஆகும். கனரக வாகனம் இயக்க இயலாத நிலையில் உள்ளது. பேருந்து போக்குவரத்து வசதிக்கு ஏற்ப இச்சாலை அமைக்கும் பணி நிறைவுபெற்றபின், மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, இப்பகுதிக்குப் பேருந்து*

[2013 அக்டோபர் 28

வசதியை ஏற்படுத்தித் தர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. சுரேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தாரகை அம்மா அவர்களை வணங்குகிறேன். நான் முன்பே கூறியதைப்போல, எனது தொகுதி மக்கள் நான் அம்மாவை சந்தித்தவுடன் "ஆளும் வளரணும், அறிவும் வளரணும் அதுதாண்டா வளர்ச்சி, நீ அம்மாவை சந்திக்க நினைத்ததே நீ எடுத்த சிறப்பான முயற்சி" என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், நாராயணன்குப்பம் கிராமத்தில் தடுப்பணையும், குப்பநத்தம் வரையிலே தடுப்பணையும், சாத்தனூர் அணைக்கு பராமரிப்புத் தொகையும், அரசுப் பேருந்து நிற்பதற்கு டெப்போவும், செங்கத்திற்கு ஆர்.டி.ஓ. அலுவலகமும் போன்ற எண்ணற்ற உதவிகளை அளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 4-10-2013 அன்று பட்டாசு வெடித்து, அந்தக் கோர விபத்தில் மூன்று பேர் உயிர்நீத்திருக்கின்றார்கள். ஒருவர் கால் இழந்திருக்கின்றார். அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உதவிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிட மக்களின் காவல் தெய்வமாய் விளங்குகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் குடும்பங்களுக்கு உதவி செய்திட வேண்டுமாய் மனப்பூர்வமாக வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**43—**

### தடுப்புச் சுவர்

***15279—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதி, கீழக்கரையில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள படகுகள் நிறுத்தும் தளத்தின் இருபுறமும் தடுப்புச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2013 அக்டோபர் 28]

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரம் தொகுதி, கீழக்கரையில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள படகுகள் நிறுத்தும் தளத்தை தற்போது 18 மீன்பிடிப் படகுகள் பயன்படுத்தி வருகின்றன. இப்படகு நிறுத்தும் தளத்தில் 5,400 கிலோ அளவிற்கு மீன்கள் கொண்டுவரப்படுகின்றன. இத்தளத்தில் தற்போது மீன் துறை சார் ஆய்வாளர் அலுவலகம், TAFCOFED மூலம் டீசல் பங்க், மீன் இறங்குதளம், Light House மற்றும் மீன் ஏலக்கூடம் போன்ற வசதிகள் உள்ளன. கீழக்கரையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மீன் இறங்குதளத்தில், Fish Landing Center-ல் இருபுறமும் தடுப்புச் சுவர்கள் அமைத்தால் படகுகளிலிருந்து மீன்களை இறங்குதளத்தில் கொண்டுவர இயலாது. மேலும், மீன் இறங்குதளத்தில் தடுப்புச் சுவர்கள் இல்லாமல் கட்டுவதற்கு முக்கியமான காரணம், மீனவர்கள் எளிதாக தரையிலிருந்து ஐஸ், மீன்பிடி வலைகள் மற்றும் பிற பொருட்களைப் படகுகளுக்கு எடுத்துச் செல்லமுடியும். படகிலிருந்து மீன்களையும், மீன்பிடி வலைகளையும் தளத்திற்குக் கொண்டு வரமுடியும் என்பதால்தான். படகின் மேல் மட்டமும், இறங்குதளத்தின் தரை மட்டமும் சமமாக இருக்கும் அளவில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இராமநாதபுரம் தொகுதி, கீழக்கரையில் கட்டப்பட்டுள்ள படகு நிறுத்தும் தளத்தில் படகுகளைக் கட்டுவதற்கு தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆகையால், படகுகள் நிறுத்தும் தளத்தின் இருபுறமும் தடுப்புச் சுவர்கள் கட்ட சாத்தியமே இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள கீழக்கரையில் ஏற்கெனவே ஒரு பழைய படகு தளம் இருக்கின்றது. அதற்குப் பதிலாகத்தான் 5 கோடி ரூபாய் செலவில் இந்தப் படகு தளம் அமைக்கப்பட்டது. ஆனால், அது மாண்புமிகு

[2013 அக்டோபர் 28

அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இன்னும் பயன்பாட்டிற்கு வரவில்லை. மாலை நேரங்களிலே கீழக்கரை மக்களுக்குப் பொழுதுபோக்கு இடமாக அது அமைந்துள்ளது. குழந்தைகள், பெண்களெல்லாம் அங்கே செல்லக்கூடிய நேரத்திலே, பலமாகக் காற்று அடித்தால் மக்கள் கடலிலே விழக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதனால்தான், இந்தக் கேள்வியை நான் எழுப்ப வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது. எனவே, அதை படகு தளமாகப் பயன்படுத்தினால் நல்லது. இல்லாவிட்டால் அங்கே மக்கள் செல்வதைத் தடுக்க வேண்டும் அல்லது சுற்றுலாத்தலமாக அதை மாற்ற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, கீழக்கரையை நாங்கள் ஆய்வு செய்தோம். அப்போது அங்கேயிருக்கிற மீனவர்கள் எல்லோரும் இது ஓர் அருமையான திட்டம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னால்தான் எங்களுக்கு மீன்பிடி இறங்குதளம் எல்லாம் கிடைத்திருக்கிறது என்று மிகவும் பெருமைப்பட கூறினார்கள். அங்கே மீனவர்களுக்கென்று 18 படகுகள் இருக்கின்றன. F.R.P. Boat இருக்கிறது, டீசல் பங்க் இருக்கிறது. மீன் ஏலக்கூடம் இருக்கிறது. மீன்பிடிப் படகுகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதுதான் மீன் இறங்குதளம். சுற்றுலாத்தலம் அமைக்க வேண்டுமென்றால், அதற்கு வேறு இடம் பார்க்க வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற எண்ணத்திலே, அனைத்துத் தரப்பினரையும் திருப்திப்படுத்தக்கூடிய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையான சுற்றுலாத்தலம் அமைக்க வேண்டும் என்பதற்கு அங்கே வேறு நல்ல சிறப்பான இடம் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதைத் தேர்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கருத்துரு அனுப்பினால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 அக்டோபர் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. என்னுடைய தொகுதியிலே உள்ள மண்டபத்தில் 800 விசைப் படகுகள் இருக்கின்றன. மண்டபம் வடக்குக் கடலில் கடலோரக் காவல் படையினுடைய ஜெட்டி அருகிலிருந்து சுமார் 200 மீட்டர் தூத்திற்கு ஆற்றுவாய் சேனல் ஒன்று இருக்கின்றது. அந்தச் சேனல் ஆழமாக இல்லாததன் காரணமாக, ஒரே ஒரு படகு மட்டும் போகக்கூடிய நிலைமை இருப்பதால், சில நேரங்களிலே படகுகள் மோதிக் கொள்ளக்கூடிய ஒரு நிலையும் இருக்கின்றது. 34 ஆண்டு காலமாக இந்த ஆற்றுவாயை ஆழப்படுத்த வேண்டுமென்று மண்டபம் பகுதி மீனவர்கள் தொடர்ச்சியாக கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது மீன் இறங்குதளத்தில் இரு பக்க சுவர்கள் அமைப்பதுபற்றி. இப்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மண்டபம் பகுதியை ஆழப்படுத்துகிற விஷயத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதை ஆய்வு செய்யும். Low water-ல் வரும்போது கொஞ்சம் சிரமமாக இருக்கும், high water-ல் வரும்போது அங்கே பிரச்சினை அவ்வளவாக இருக்காது. அங்கே பவளப் பாறை இருப்பதாக மத்திய ஆராய்ச்சி சுற்றுச்சூழல் துறை சொல்கின்ற காரணத்தினாலே, அதை ஆய்வு செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 அக்டோபர் 28

**44—**

**மணிமண்டபம்**

***33967—திரு. டி. இராமச்சந்திரன்:**

*மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், தொரப்பள்ளியில் மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கு மணிமண்டபம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தொரப்பள்ளியில் மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கு மணிமண்டபம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.*

*வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**45—**

**காலிப் பணியிடங்களை நிரப்புதல்**

***37101—திரு. என்.வி. காமராஜ்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2013 அக்டோபர் 28]

*(அ) வேதாரண்யம் தொகுதி, வேதாரண்யம் அரசு பொது மருத்துவமனையிலுள்ள மருத்துவர் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதி, வேதாரண்யம் அரசு பொது மருத்துவமனை 59 படுக்கை வசதிகளைக்கொண்ட தாலுகா மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றுக்கு 350 வெளி நோயாளிகளும், சராசரியாக 44 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனைக்கு 12 மருத்துவர் பணியிடங்கள் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. 6 மருத்துவர்கள் தற்போது பணிபுரிகின்றனர். எஞ்சியுள்ள மருத்துவர் பணியிடங்கள் பணி ஓய்வு மற்றும் பணி உயர்வு காரணமாக ஏற்பட்ட வெற்றிடங்களாகும். இம்மருத்துவமனையில் 44 உள் நோயாளிகள் மட்டுமே தங்கி சிகிச்சை பெற்றுவருகின்றனர். எனவே, தற்போது பணியில் உள்ள 6 மருத்துவர்களைக்கொண்டு சிறப்பான முறையில் ஏழையெளிய மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*

**திரு. என்.வி. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா, 6 கோடி தமிழர்களின் மனசாட்சி! அம்மா நடத்தும் அரசாட்சி, அதற்கு இத்தனை நாட்களில் அவர் செய்த சாதனையே அத்தாட்சி! (மேசையைத் தட்டும் ஒலி) ஈழத் தமிழரை எண்ணித் துடிப்பதில் தாயானவர்! ஈழப் பகையினை முடிப்பதில் தீயானவர்! வையம் முழுவதும் வாழும் தமிழர்கள் பாராட்டவே சட்டமன்றப் பேரவை தன்னில் கொணர்ந்தார் தீர்மானமே! தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும் காக்கின்றவர்! அறிவியலில் தமிழ் வளர வழி பார்க்கின்றவர்! அம்மா என்று சொல்லும்*

[2013 அக்டோபர் 28

*சொல்லில் தேன் ஊறும்! நம் அம்மா வாழும் காலம் நூல் ஆகும்! (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் தொகுதி, வேதாரண்யத்திலுள்ள அரசு பொது மருத்துவமனையில் உள்ள மருத்துவர் பணியிடங்கள் 12 ஆகும். அதில் பணியில் இருக்கும் மருத்துவர்கள் 5 பேர்தான். காலிப் பணியிடங்கள் 7 ஆகும். இங்கு மகப்பேறு வசதிகள் இல்லை. தீவிர சிகிச்சை தேவைப்படுகின்றவர்கள் தொலைவில் உள்ள ஊர்களாகிய நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களுக்குப் போகவேண்டியுள்ளது. நாளொன்றுக்கு சுமார் 500 ஏழையெளிய மக்கள் மாண்புமிகு அம்மா அவர்களை நம்பி புற நோயாளிகளாக மருத்துவ வசதி பெறுவதற்கு இம்மருத்துவமனைக்கு வருகின்றனர். மாண்புமிகு அம்மா அவர்களின் புகழுக்கு மேலும் ஒரு மாணிக்கமாக அமைய வேதாரண்யம் மருத்துவமனையில் காலிப் பணியிடங்களை நிரப்பியும், மகளிர் சிறப்பு மருத்துவப் பிரிவு தொடங்கியும், மகப்பேறு பிரிவு உருவாக்கியும் மற்றும் அமரர் ஊர்தி ஒன்று வழங்கியும், குளிரூட்டப்பட்ட பிணவறை அமைத்துத் தருமாறும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் அரசு பொது மருத்துவமனையில் மனநோய்ப் பிரிவு, சர்க்கரை நோய் சிகிச்சைப் பிரிவு, உயர் இரத்த அழுத்த சிகிச்சைப் பிரிவு, நுண்கதிர் பிரிவு, காசநோய் வெளி நோயாளி பகுதி, பேறுகால பின் கவனிப்பு மற்றும் குடும்ப நல மையம், குடும்ப நல அறுவை அரங்கம், அவசரகால ஊர்தி, சித்தா பிரிவு, அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மற்றும் தொற்றாநோய்ப் பிரிவு போன்ற சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.*

*மேலும், இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள 12 மருத்துவர் பணியிடங்களில் பல் மருத்துவர் உட்பட 6 மருத்துவர்கள் பணியில் உள்ளார்கள். 6 பணியிடங்கள் காலியாக*



2013 அக்டோபர் 28]

*உள்ளன. அதேபோன்று இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 12 செவிலியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு, அனைவரும் பணியில் உள்ளனர். தமிழகம் முழுவதும் காலியாக இருந்த 2,159 மருத்துவ அலுவலர் பணியிடங்களை நிரப்ப, மருத்துவப் பணி தேர்வு வாரியம்மூலம் மருத்துவ அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டு, 1,773 பொது மற்றும் சிறப்பு மருத்துவர்களுக்கு 13-9-2013 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் (மேசையைத் தட்டும் ஒலி) பணி நியமன ஆணை வழங்கப்பட்டு, அனைவரும் பணியில் சேர்ந்துள்ளனர். மேலும், இன்று மீதமுள்ள 386 காலி மருத்துவப் பணியிடங்களுக்கும் கலந்தாய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கலந்தாய்வுக்குப்பின் இவர்களுக்கு உடனடியாக பணி நியமன ஆணை வழங்கப்பட்டு பணியில் சேரவுள்ளனர்.*

*அன்றாடம் ஒரு மருத்துவர் 100-லிருந்து 150 நோயாளிகளைப் பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்க வேண்டும். ஆனால், இம்மருத்துவமனையில் 350 வெளி நோயாளிகள் மட்டுமே சிகிச்சை பெறுவதால், தற்போதுள்ள 6 மருத்துவர்களே போதுமானது. இருந்தாலும், கூடியவிரைவில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களும் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மருத்துவமனையில், முக்கியமாக, பெண்களுக்கு மகப்பேறு காலங்களில் பிரசவம் பார்க்கக்கூடிய வசதி அங்கே இல்லை. பெண்கள் சிகிச்சைக்காக ஒரு தனிப் பிரிவு தொடங்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் இங்கே கோரிக்கை வைத்தார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு தேவைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்; ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*

[2013 அக்டோபர் 28

**திரு. என்.வி. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## [பட்டியல்கள் 9 முதல் 16 வரை]@

## பட்டியல் 9

**1—**

### வாக்காளர் அடையாள அட்டை

**வினா எண் 28294—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாக்காளர் அடையாள அட்டை மற்றும் பட்டியலில் திருத்தம் செய்ய இணையதளம்மூலம் விண்ணப்பிக்கும் முறையினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணைகளின்படி வாக்காளர் பட்டியலில் பெயர்களைப் பதிவு செய்ய மட்டுமே இணையதளத்தின்மூலம் விண்ணப்பிக்க தற்போது வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு விண்ணப்பித்தோருக்கு, உரிய கள விசாரணைக்குப் பிறகு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டு, பின்னர் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்படுகிறது. வாக்காளர் பட்டியலில் பதிவுகளைத் திருத்தம் செய்ய இணையதளம்மூலம் விண்ணப்பிக்கத் தேவையான மென்பொருள் தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. அப்பணி நிறைவடையும் போது வாக்காளர் பட்டியலில் பதிவுகளைத் திருத்தம் செய்ய இணையதளம்மூலம் விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்படும்.

---

@இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2013 அக்டோபர் 28]

**2—**

### துணை மின் நிலையம்

**வினா எண் 8113—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், சாலைக்கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதிக்குட்பட்ட இளையான்குடி ஒன்றியம், சாலைக் கிராமத்தில் ஏற்கெனவே 1x10 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியுடன்கூடிய ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. இதன் உச்சகட்ட மின்பளுவை 3.8 எம்.வி.ஏ. மட்டுமே. சாலைக்கிராமத்திற்கு தற்சமயம் தரமான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இப்பகுதியில் மின்பளு விரைந்து அதிகரிக்க வாய்ப்பு இல்லை என்பதால், சாலைக்கிராமத்தில் உள்ள 110/11 கி.வோ. துணை மின் நிலையத்தில் இருக்கும் மின்மாற்றியின் திறனே போதுமானது. எனவே, சாலைக்கிராமத்தில் மேலும் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**3—**

### சீரான மின்சாரம்

**வினா எண் 14342—திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, காமக்கூரில் சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 அக்டோபர் 28

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, காமக்கூரில் பாளையத்தில் 100 கே.வி.ஏ. மின்மாற்றிகள் 8 எண்கள் பொருத்தப்பட்டு இக்கிராமத்திற்குட்பட்ட அனைத்து மின் இணைப்புகளுக்கும் தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.*

**4—**

**மின் கடத்தி**

**வினா எண் 15845—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட பெரிய தொழிற்சாலைகள் தனிப்பட்ட மின் கடத்தியினைப் பயன்படுத்தி தேவையான மின்சாரத்தை வெளியிலிருந்து பெற அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட பெரிய தொழிற்சாலைகள் தேவையான மின்சாரத்தை வெளியிலிருந்து பெற விருப்பம் தெரிவித்து அனுமதி கோரினால், அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.*

**5—**

**மின்சாரத்தின் அளவு**

**வினா எண் 15846—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில் உள்ள பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் உயர் அழுத்த மின்சாரத்தின் அளவு என்ன?*



2013 அக்டோபர் 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*தமிழகத்தில் மொத்தம் 29 புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்ட பன்னாட்டு நிறுவனங்களுக்கு 216.66 எம்.வி.ஏ. (மெகா வாட்) அளவுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. அவற்றில் சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களில் உள்ள 26 பன்னாட்டு நிறுவனங்களுக்கு 184.01 எம்.வி.ஏ. (மெகா வாட்) அளவுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது.*

**6—**

**இலவச மின்சாரம்**

**வினா எண் 16105—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் சொந்தமாக விசைத்தறிக் கூடம் வைத்திருப்பவர்களுக்கு 2 மாதங்களுக்கொருமுறை 500 யூனிட்டுகள் மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறதா?*

*(ஆ) ஆம் எனில், தமிழ்நாட்டில் பயன்பெறுவோர் எத்தனை பேர்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம். தமிழ்நாட்டில் சொந்தமாக விசைத்தறிக் கூடம் வைத்து நெசவு செய்யும் மின் பயனீட்டாளர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை 500 யூனிட்டுகள் மின்சாரம் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.*

*(ஆ) கடந்த 2010-2011 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் 65,214 பேர் பயன்பெற்றனர். 2011-2012 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் 67,345 பேர் பயன்பெற்றனர். 2012-2013 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் 69,476 பேர் பயன்பெறுவார்கள்.*

[2013 அக்டோபர் 28

**7—**

## வீடுகள் பராமரிப்பு

**வினா எண் 11066—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை ஒன்றியம், பாக்குடி ஊராட்சி, மங்களாப்பட்டியில் உள்ள காலனி வீடுகள் பழுதடைந்துள்ளதை பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

**8—**

## ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 14817—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம், 11-வது வார்டு, மதுரை பிள்ளை தெருவில் ஆழ்துளைக் கிணறு மற்றும் மின் மோட்டார் அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2013 அக்டோபர் 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம், 11-வது வார்டு, மதுரை பிள்ளை தெருவில் ஆழ்துளைக் கிணறு, மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.*

**9—**

## கைப்பம்பை சீரமைத்தல்

**வினா எண் 14820—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம், 11-வது வார்டு, ராஜாபாதர் தெரு கடைசியில் உள்ள பழுதடைந்த குடிநீர் கைப்பம்பை சீரமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம், 11-வது வார்டு, ராஜாபாதர் தெரு கடைசியில் உள்ள பழுதடைந்த குடிநீர் கைப்பம்பு சீரமைக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.*

**10—**

## வீடுகள் பராமரிப்பு

**வினா எண் 16181—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், பேராம்பூர் ஊராட்சி, பேராம்பூர் ஆதி திராவிடர் காலனி வீடுகளைப் பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

**11—**

**வீடுகள் பராமரிப்பு**

**வினா எண் 16182—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், நாங்குப்பட்டி ஊராட்சி, மேலசித்தக்குடிப்பட்டி ஆதி திராவிடர் காலனி வீடுகளைப் பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை*





*வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

**12—**

**நாய்களைக் கட்டுப்படுத்துதல்**

**வினா எண் 21814—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சென்னை மெரினா, பெசன்ட் நகர் கடற்கரையில் திரியும் நாய்களைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*மெரினா கடற்கரையில் 26-9-2012 அன்று 2 நாய்களும், 29-9-2012 அன்று 8 நாய்களும் பிடிக்கப்பட்டன. எலியட்ஸ் கடற்கரையில் 14-11-2012 அன்று 5 நாய்களும், 5-12-2012 அன்று 4 நாய்களும் பிடிக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்படும்.*

**13—**

**மின் விளக்குகள்**

**வினா எண் 25498—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 33-வது வார்டு, சோமசுந்தரம் நகரில் மின் விளக்குகள் இல்லாத அனைத்து மின் கம்பங்களுக்கும் மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2013 அக்டோபர் 28

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகராட்சி, சோமசுந்தரம் நகரப் பகுதியில் அனைத்து மின் கம்பங்களுக்கும் மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.*

**14—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 16929—திரு. சு. ரவி:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், சிறுணமல்லி ஊராட்சி, சம்பத்துராயன்பேட்டையில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கிடவும், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிடவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

*அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், சிறுணமல்லி ஊராட்சி, சம்பத்துராயன்பேட்டையில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்குத் தனியாக வேலைவாய்ப்பு ஏதும் வழங்கிட இயலாது. பணியிடம் காலியாக இருக்கும்பட்சத்தில்,* Tamil Nadu Public Service Commission *மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் கல்வித் தகுதியின் அடிப்படையிலும், 3 சதவிகித இட ஒதுக்கீட்டின்படியும் வேலைவாய்ப்பு வழங்கப்படும். இலவச வீட்டுமனைப் பட்டா முன்னுரிமை அடிப்படையில் வருவாய்த் துறையின் வட்டாட்சியர் அலுவலகம்மூலம் வழங்கப்படும்.*

*(ஆ) வினா எழவில்லை.*



2013 அக்டோபர் 28]

**15—**

## நிரந்தரப் பணி

**வினா எண் 12888—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உயர் கல்வி மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் குறைந்த ஊதியத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு நிரந்தரப் பணியும், அரசு ஊதியமும் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*சுயநிதிக் கல்லூரிகள் துவங்க அரசு அனுமதித்து ஆணை வழங்கும்போது மானியம் வழங்க இயலாது என்ற நிபந்தனையுடன் அனுமதி வழங்கப்படுகிறது. எனவே, சுயநிதிக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு நிரந்தரப் பணி மற்றும் அரசு ஊதியம் வழங்குவது என்பது அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டதாகும். இருப்பினும், இதுகுறித்து கோரிக்கைகள் பெறப்படும்போது, தகுதியின் அடிப்படையில், உரிய விதிகளுக்குட்பட்டு ஆய்வு செய்யப்படும்.*

**16—**

## விவசாயக் கிடங்கிற்குக் கட்டடம்

**வினா எண் 14411—திருமதி ம. சக்தி:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, திருவெண்காடு, காரைமேடு மற்றும் வைத்தீஸ்வரன்கோவில் பகுதிகளிலுள்ள விவசாயக் கிடங்கிற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2013 அக்டோபர் 28

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) சீர்காழி தொகுதி, திருவெண்காடு, காரைமேடு மற்றும் வைத்தீஸ்வரன்கோவில் பகுதிகளிலுள்ள விவசாயக் கிடங்கிற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**17—**

**நவீனக் கிடங்கு**

**வினா எண் 17350—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து 50 நவீனக் கிடங்குகள் கட்டும் பணியினை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து 50 நவீனக் கிட்டங்கிகளைக் கட்டுவதற்கு அரசாணை நிலை எண் 224, வேளாண்மை (நீமே-2) துறை, நாள் 28-11-2011-ன்படி அனுமதிக்கப்பட்டது. தற்போது கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

**18—**

**புதுப்பித்தல்**

**வினா எண் 21053—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி**: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2013 அக்டோபர் 28]

*(அ) சங்ககிரி தொகுதி, மகுடஞ்சாவடி வட்டார வேளாண் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) சங்ககிரி தொகுதி, மகுடஞ்சாவடி, வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் மிகவும் பழைய கட்டடம் என்பதால், அவ்வலுவலகத்தைப் புதுப்பிக்க இயலாது.*

*(ஆ) வினா எழவில்லை.*

**19—**

**உழவர் சந்தை**

**வினா எண் 24972—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் பேரூராட்சியில் உழவர் சந்தை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் பேரூராட்சியில் உழவர் சந்தை அமைத்திடுவது தொடர்பாக திட்டம் ஏதுமில்லை.*

*புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி, ஆலங்குடி, கந்தர்வக்கோட்டை, கரம்பக்குடி, விராலிமலை ஆகிய ஐந்து இடங்களில் விவசாயிகள் மற்றும் நுகர்வோரின் பயன்பாட்டிற்காக உழவர் சந்தைகள் இயங்கி வருகின்றன. விராலிமலை உழவர் சந்தையிலிருந்து அன்னவாசல் பேரூராட்சி 23 கி.மீ. தொலைவில் உள்ளதால், விராலிமலை உழவர் சந்தையினை அன்னவாசல் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.*

*(ஆ) வினா எழவில்லை.*

**20—**

## திசுவாழை சாகுபடி

**வினா எண் 27135—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதியில் திசுவாழை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அரசு உதவி செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* மானாமதுரை தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பரீட்சார்த்த முறையில் 2010-2011 மற்றும் 2011-2012 ஆம் ஆண்டுகளில் திசுவாழை சாகுபடிக்கு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, முன்னோடி விவசாயிகளுக்கு மானியத்தில் திசுவாழைக் கன்றுகள் வழங்கப்பட்டன. பொதுவாக, மேற்படி வட்டாரத்தில் சொட்டு நீர்ப்பாசனத்தில் திசுவாழைக் கன்றுகள் நடப்பட்டதில், சாதாரண நாட்டு உயர் விளைச்சல் இரகங்களைவிட மகசூல் குறைவாகவும், இலைகள்மூலமாக வருவாய் இல்லாததாலும், விவசாயிகள் ஏற்கெனவே சாகுபடி செய்த உயர் விளைச்சல் இரகங்களில் (மொந்தன், ரஸ்தாளி, பூவன் மற்றும் இதர இரகங்கள்) வருவாய் அதிகமாகக் கிடைப்பதால், விவசாயிகள் திசுவாழை சாகுபடியில் முனைப்பு காட்டுவதில்லை. மேலும், திசுவாழை சாகுபடிக்கு மானாமதுரை வட்டாரத்தின் தட்பவெப்ப நிலை உகந்ததாக இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**21—**

## விவசாயத் தொழிலைப் பயிற்றுவித்தல்

**வினா எண் 28773—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தொழில் பயிற்சி மையங்கள் மற்றும் பொறியியல் கல்லூரிகள்மூலமாக நிலம் உழுதல், பயிரிடுதல், களை எடுத்தல் போன்ற விவசாயத் தொழிலைப் பயிற்றுவிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* நிலம் உழுதல், பயிரிடுதல், களை எடுத்தல் போன்ற வேளாண்மைத் தொழில்களைப் பயிற்றுவிக்கும் பணியில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையங்கள் ஈடுபட்டு வருகின்றன. பயிற்சிகள் மற்றும் வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதற்கான தொழில்நுட்ப உத்திகள் தேவைப்படும் விவசாயிகள், அந்தந்த மாவட்டங்களிலுள்ள வேளாண்மை அறிவியல் நிலையங்களின் திட்ட ஒருங்கிணைப்பாளர்களை அணுகி பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளலாம். ஆகையால், தொழில் பயிற்சி மையங்கள் மற்றும் பொறியியல் கல்லூரிகள் மூலமாக நிலம் உழுதல், பயிரிடுதல், களை எடுத்தல் போன்ற விவசாயத் தொழிலைப் பயிற்றுவிக்க அவசியம் எழவில்லை.

**22—**

## கட்டடம்

**வினா எண் 24705—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், இடைப்பட்டி ஊராட்சி, கூவாட்டுப்பட்டி நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், இடைப்பட்டி ஊராட்சி, கூவாட்டுப்பட்டியில் நியாய விலைக் கடை எதுவும் செயல்படவில்லை. எனவே, நியாய விலைக் கடை

[2013 அக்டோபர் 28

இல்லாத கூவாட்டுப்பட்டி கிராமத்தில் கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

**23—**

## கட்டடத்தைப் பழுது நீக்குதல்

**வினா எண் 24802—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், கட்டக்குடி ஊராட்சி, கட்டக்குடி நியாய விலைக் கட்டடத்தை பழுதுநீக்கி பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், மலைக்குடிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டுப்பாட்டில் செயல்படும் HP 116 கட்டக்குடி முழுநேர அங்காடி (மொத்த குடும்ப அட்டைகள் 345) தற்போது அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அக்கட்டடத்தின் தரை தளத்தின் முன்பகுதி தோற்றம் பழுதடைந்திருந்தது. தற்போது பழுது நீக்கி சீர் செய்யப்பட்டுள்ளது.

**24—**

## நிபந்தனை தளர்த்துதல்

**வினா எண் 13165—திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தனியார் ஒதுக்குக்காடு சட்டம், 1949-ன்படி விற்பனை உள்ளிட்ட பரிவர்த்தனைக்கு விதிக்கப்பட்ட நிபந்தனையைத் தளர்த்தும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2013 அக்டோபர் 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தனியார் காடுகளில் பெருமளவில் முறையின்றி மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்கவும், சூழலியல் சமன்பாட்டினைப் பாதுகாக்கவும் 1949 தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் 1979 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இயற்கையாக வளர்ந்த மரங்களைக் கொண்ட பல தனியார் காடுகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் உண்டு. வனத்தைப்போல் தோற்றமளிக்கும் இயற்கையாக வளர்ந்த மரங்களைக் கொண்ட 2 எக்டேர் பரப்பளவுக்கு மேற்பட்ட தொடர்ச்சியான இடங்கள் இந்தச் சட்டத்தின்மூலம் தனியார் காடுகளாக அறிவிக்கப்பட்டன. இந்த வகையான இடங்களைக் கண்டறிந்து அறிவிப்பு செய்ய மாவட்ட ஆட்சியர் தலைமையிலான ஒரு குழுவும் உருவாக்கப்பட்டது.

இந்தச் சட்டத்தின் பிரிவு 3-ன்படி, எந்த நில உரிமையாளரும் தனது நிலத்தினை மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் உள்ள மாவட்டக் குழுவின் முன்னனுமதியின்றி விற்பதோ, அடமானம் வைப்பதோ செல்லத்தக்கதல்ல. மேற்படி சட்டத்திற்குப் புறம்பாக பல நபர்கள் மாவட்டக் குழுவின் முன் அனுமதி பெறாமல் தனியார் வன நிலங்களை விற்றும், வாங்கியும் உள்ளனர். இவ்வகை செயல்களை முறைப்படுத்த, தனியார் வன நிலங்களை வாங்கியவர்களுக்கு வழிவகை செய்ய தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம் 1949-க்கு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு, கடந்த 2011 ஆம் ஆண்டு மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்டமுன்வடிவுக்கு மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன், அதன்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், தமிழ்நாடு தனியார் வனச் சட்டம் 1949-ல் எழக்கூடிய பிரச்சினைகளை ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை தர உயர்நிலைக் குழு ஒன்று அரசாணை (டி) எண் 322, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 3-9-2012-ல் அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையிலும் இதுகுறித்து அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கும்.

[2013 அக்டோபர் 28

25—

## சாலை வசதி

**வினா எண் 17419—திரு. ஓ.கே. சின்னராஜ்:** *மாண்புமிகு வனத் துறை அவர்கள் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, தோலம்பாளையம் கோபனாரி சாலையில் வனத் துறைக்குச் சொந்தமான 4 கி.மீ. சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, தோலாம்பாளையம் கோபனாரி சாலையில் வனத் துறைக்குச் சொந்தமான 4.12 கி.மீ. சாலையைச் சீரமைக்க (கி.மீ. 5/940 முதல் 10/060) பகுதி 1 திட்டம் சேராதது திட்டத்தின்கீழ் ரூ.73.00 இலட்சம் தொகையானது அரசாணை எண் 307, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வ.10) துறை, நாள் 23-08-2012-ல் ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி சாலையைச் சீரமைக்கும் பணி திருச்சி வனப் பொறியியல் கோட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு, 2012-2013 ஆம் நிதியாண்டில் இப்பணியை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

26—

## மரங்களை ஏலம் விடல்

**வினா எண் 22649—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழக வனப் பகுதிகளில் இயற்கையாகக் கீழே விழும் விலையுயர்ந்த மரங்களை ஏலம் விட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*தமிழக வனப் பகுதிகளில், வனவிலங்கு சரணாலயம் மற்றும் வன உயிரின பூங்காக்களில் இயற்கையாகக் கீழே விழும் விலையுயர்ந்த மரங்கள் அப்படியே விடப்படுகின்றன. அவற்றை அகற்றுவது மற்றும் விற்பனை செய்வது இல்லை. அவை மக்கி எருவாக மாற ஸ்தலத்திலேயே விடப்படுகின்றன. மேலும், காப்புக் காடுகளில் இயற்கையாகக் கீழே விழும் பட்டுப்போன இறந்த மற்றும் அபாயகரமான மரங்களை* (Decayed/Dead and dangerous trees) *சேகரம் செய்து, அவற்றை படிவம் 5-ல் கொண்டு வந்து, அவற்றுக்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டு அவற்றை பொது ஏலம்மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*



2013 அக்டோபர் 28]

27—

## சந்தன எண்ணெய் தொழிற்சாலை

**வினா எண் 23335—திரு. கோவி. சம்பத்குமார்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வாணியம்பாடி தொகுதி, தெக்குப்பட்டு பகுதியில் சந்தன எண்ணெய் தொழிற்சாலையை மீண்டும் தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:**

*சந்தன மரக்கட்டைகள் வனத் துறையிடமிருந்து கொள்முதல் செய்தல் மற்றும் அரசுக்கு ஏற்படும் இலாபம் போன்றவற்றைக் கருத்தில்கொண்டு, இத்தொழிற்சாலை மீண்டும் செயல்பட வாய்ப்பில்லை.*

28—

## புதிய குடும்ப அட்டை

**வினா எண் 2599—திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சிவகங்கை மாவட்டத்தில் புதிய குடும்ப அட்டை விரைந்து கிடைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

[2013 அக்டோபர் 28

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

*புதிய குடும்ப அட்டை கோரும் மனுக்கள் மீது தாமதமின்றி களப்பணியாளர்களால் 100% விசாரணை செய்து பரிந்துரை செய்யப்படும் விண்ணப்பங்கள் உரிய ஆவணங்களுடன் மாவட்ட வழங்கல் அலுவலருக்கு அனுப்பப்படுகின்றன. புதிய குடும்ப அட்டை வழங்குமாறு கோரும் விண்ணப்பங்களில் குடும்ப அட்டை பெறத் தகுதியுள்ளவர்களுக்கு விரைவில் புதிய குடும்ப அட்டைகள் வழங்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உண்மையான குடும்பங்களுக்கு சிரமமின்றி குடும்ப அட்டைகள் கிடைக்கப்பெறும்பொருட்டு, சம்பந்தப்பட்ட அனைத்துப் பணியாளர்களும் பணியாற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**29—**

## சூரியசக்தி விளக்குகள்

**வினா எண் 22404—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்**: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சூரியசக்தி விளக்குகள் மற்றும் ஆவின்பால் ஆகியவற்றை நியாய விலைக் கடைகள் மூலமாக வழங்கிட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

*பெரும்பாலான நியாய விலைக் கடைகள் சிறிய பரப்பளவு கொண்ட இடத்திலேயே இயங்கி வருகின்றன. இவற்றில் பொது விநியோகத் திட்டம்/சிறப்பு பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்களை இருப்பு வைத்தால் இட நெருக்கடி ஏற்படும் என்பதால் சூரியசக்தி விளக்குகள் மற்றும் ஆவின்பால் ஆகியவற்றை விற்பனை செய்வது மிகுந்த சிரமம் ஆகும்.*



2013 அக்டோபர் 28]

**30—**

## குடும்ப அட்டை

**வினா எண் 27501—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்ட வழங்கல் அலுவலகத்தில் குடும்ப அட்டைக்காக விண்ணப்பித்தவர்களுக்கு விரைவில் குடும்ப அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்ட வழங்கல் அலுவலகத்தில் குடும்ப அட்டைக்காக விண்ணப்பித்த தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு விரைவில் குடும்ப அட்டை வழங்கப்படும்.*

**31—**

## கழிவுநீரை வெளியேற்றுதல்

**வினா எண் 10281—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் பூஜ்ய அளவிலான கழிவுநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு வழிகளை ஆராய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூரில் உள்ள சலவை மற்றும் சாயப்பட்டறைகள் வெளியேற்றும் கழிவுநீரை உரிய தொழில்நுட்பமான எதிர்மறை சவ்வூடு பரவல் மற்றும் அடர்கசடு மேலாண்மை உத்திகளைப் பயன்படுத்தி அமைக்கப்படும் சுத்திகரிப்பு*

அமைப்பின்மூலம், சுத்திகரிக்கப்பட்ட நீரை மறுசுழற்சி செய்தும், பிரித்தெடுக்கப்பட்ட உப்பினை மறு பயன்பாடு செய்தும், கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலை அடைவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 28-7-2011 அன்று திருப்பூர் சாயப்பட்டறைகள் உரிமையாளர்களின் சங்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய கூட்டத்தின் முடிவில், அரசு ரூ.200 கோடியை வட்டியில்லாத கடனாக, 20 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் அவற்றின் 502 உறுப்பினர்கள் பயன்பெறும்விதமாக, தலா ரூ.10 கோடி வீதம் வழங்குவது என முடிவெடுக்கப்பட்டது. இதற்காக, இருவேறு தொழில்நுட்பங்கள் தேர்வு செய்யப்பட்டன. அவற்றில் (1) தமிழ்நாடு வாட்டர் இண்வஸ்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட் (TWICL) நிறுவனம் உத்தேசித்துள்ள பிரைன் சொலுசன் தொழில்நுட்பம் (Brine Solution) மற்றும் (2) குஜராத் மாநிலம், பரூச் என்ற இடத்திலுள்ள தி/ள் பிர்லா சென்சுரி மில்ஸ் சாயப்பட்டறை நிறுவியுள்ள நானோ தொழில்நுட்பம் ஆகிய இரண்டில் ஏதேனும் ஒன்றை நிறுவி, கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலையை அடைவதற்காக நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது. தமிழ்நாடு மாசுக் கட்டுபாடு வாரியம், அருள்புரம், அங்கேரிபாளையம், வீரபாண்டி, பார்க், இராயபுரம், சின்னக்கரை, கள்ளிக்காடு, மன்னரை, காசிபாளையம், திருப்பூர் முருகம்பாளையம், ஆண்டிபாளையம், குன்னன் கல்பாளையம், ஈஸ்டன், சிறுபுளுவப்பட்டி மற்றும் கரைபுதூர் ஆகிய 15 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் உறுப்பினர்களாக உள்ள 412 உறுப்பினர் சலவை மற்றும் சாயப்பட்டறைகளை தற்போது உள்ள கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலை அடைவதற்கான அமைப்பினை, அதிகபட்சமாக 30 முதல் 70 சதவீதம் வரையிலான கொள்ளளவில் இயக்கி, மேற்கூறிய தொழில்நுட்பத்தினை இத்தகைய அளவில் இயக்கி, அதனை நிரூபிக்க முன்னோட்டம் செய்ய அனுமதியளித்துள்ளது.

தமிழ்நாடு மாசுக் கட்டுபாடு வாரியத்தால் நியமிக்கப்பட்ட அலுவலர்கள், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவுடன், கூட்டாக கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலை அடைவதற்கான அமைப்பினை நிறுவியுள்ள தனியார் சலவை மற்றும் சாயப்பட்டறைகளை ஆய்வு மேற்கொண்டனர். இக்குழுவின் பரிந்துரையின்படி, 51 தனியார் தொழிற்சாலைகள், வாரியத்தால் இயங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளன. மேலும், வாரியமானது மாண்புமிகு





சென்னை உயர் நீதிமன்றம் 28-1-2011 அன்று வழங்கிய உத்தரவினை மீறி செயல்பட்ட 201 தொழிற்சாலைகளில், 177 தொழிற்சாலைகளுக்கு சீல் வைத்து மூட, திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தரவிட்டது. இதுவரை 113 தொழிற்சாலைகளை மாவட்ட ஆட்சியர் சீல் வைத்து மூடியுள்ளார்.

நொய்யல் ஆற்றை 2-10-2011-ல் ஆய்வு செய்யும் போது, கரையின் இருபுறங்களிலிருந்து எடுக்கப்பட்ட நீர் மாதிரிகளில், அதிகளவிலான மொத்த கரைந்துள்ள திடப் பொருள்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டது. இதன் அடிப்படையில், நிலத்தடி நீர்க் கசிவு அல்லது நீர் நொய்யலாற்றைச் சென்றடைவது போன்ற காரணங்களால் நொய்யலாற்று நீரில் அதிகளவிலான மொத்த கரைந்துள்ள திடப்பொருட்கள் இருக்க வாய்ப்பு இருக்கிறது. மேலும், ஆற்று நீர் மாதிரிகள் நொய்யலாற்றின் மேல் புறத்திலிருந்து கீழ்ப் புறம் வரையில் அதாவது (1) அக்ரகாரபுதூர் (2) காசிபாளையம் (3) அணைபாளையம் மற்றும் (4) ஒரத்துப்பாளையம் அணை பகுதியில் மாதந்தோறும் எடுக்கப்பட்டு, பகுப்பாய்வின்படி ஆற்று நீரில் கரைந்துள்ள மொத்த திடப்பொருட்களின் அளவு 2100 மி.கி/லி. விட அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது. சாயப்பட்டறைகளை ஜனவரி 2011-ல் மூடும்பொழுது ஒரத்துப்பாளையம் அணையில் 5660 மிகி/லி. அளவிலிருந்து, தற்பொழுது 1990-2508 மி.கி/லி. என்ற அளவில் உள்ளது.

காளிங்கராயன் மற்றும் நொய்யல் ஆறு ஆகியவற்றின் நீரின் தன்மையினை தொடர்ச்சியாகக் கண்காணிக்கும் பொருட்டு, ரூ. 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் அரசானது, நொய்யல் ஆற்றில் சட்டத்திற்குப் புறம்பாக சுத்திகரிக்கப்படாத கழிவுநீரை வெளியேற்ற பயன்படுத்தப்பட்ட மண்ணில் புதைக்கப்பட்ட குழாய்கள் ஏதேனும் இருப்பின், அவற்றைக் கண்டறியவும் மற்றும் அகற்றிடவும் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய நடவடிக்கைகள்மூலம் திருப்பூரில் பூஜ்ய அளவிலான கழிவுநீரை வெளியேற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**32—**

## ஆய்வு மாளிகை

**வினா எண் 9306—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகை கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் பொதுப் பணித் துறை மூலமாக ஆய்வு மாளிகை கட்டும் பணிகள் அனைத்தும் முழுமையாக நிறைவேற்றப்பட்டு முடிக்கப்பட்டன.

**33—**

### தரைத்தளத்தைச் சீரமைத்தல்

**வினா எண் 9351—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நபார்டு கடன் உதவித் திட்டம் மூலம் மதுரை மாவட்டம், விரகனூர் மதகின் தடுப்பு தரைத்தளத்தைச் சீரமைக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், விரகனூர் மதகின் தடுப்பு தரைத்தளத்தைச் சீரமைக்கும் பணியானது ரூபாய் 5.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுவிட்டன.

**34—**

### நீர் ஆதாரம்

**வினா எண் 13989—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி/விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், வெள்ளாம்பட்டி நதியில் நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



2013 அக்டோபர் 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

வல்லம்பட்டி ஓடை உபவடிநிலத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ள மையப்பாறை கண்மாய் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ள குகன்பாறை, சிப்பிப்பாறை, கோமபங்கிபுரம் மற்றும் வல்லம்பட்டி கண்மாய் ஆகிய நான்கு கண்மாய்களின் பாசனப் பரப்பு நிலங்களுக்குப் பாசன வசதியினை மேம்படுத்த நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ், ரூ.110.65 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, இத்திட்டப் பணி 26-2-2011 அன்று துவங்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டன.

**35—**

### காணல் ஓடை

**வினா எண் 14013—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர், சிவகங்கை மற்றும் மதுரை மாவட்டங்கள், காணல் ஓடை நதியில் நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருதுநகர், சிவகங்கை மற்றும் மதுரை மாவட்டங்களில், உலக வங்கி கடனுதவியுடன், நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் காணல் ஓடை உபவடிநிலப் பகுதிகளில் உள்ள அணைக்கட்டுகள், கண்மாய்கள் மற்றும் வரத்துக் கால்வாய்கள் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகள் மூன்று தொகுப்புகளாக ரூபாய் 889.09 இலட்சம் மதிப்பீட்டில், 2010-2011-ம் ஆண்டில்

[2013 அக்டோபர் 28

துவங்கப்பட்டு, தொகுப்பு-1 மற்றும் தொகுப்பு-2-ல் உள்ள பணிகளில் 60% முடிவுபெற்றுள்ளன. தொகுப்பு-3-ல் உள்ள பணிகள் முழுமையாக முடிவு பெற்றுள்ளன.

**36—**

## நீர் நிலைகளை மேம்படுத்துதல்

**வினா எண் 16420—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நீர் நிலைகளை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) தமிழ்நாட்டில் நீர் நிலைகளை மேம்படுத்துவதற்கு அரசு பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:*

**1. நீர்வள, நிலவளத் திட்டம்**

*தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டம் உலக வங்கியின் நிதி உதவியுடன் ரூ.2,547 கோடி மதிப்பீட்டில் 2007 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை, ஆறு ஆண்டு காலத்தில் 6.69 இலட்சம் எக்டேர் பாசனப் பரப்பு பயன்பெறும் வகையில், 61 உபவடி நிலங்களில் ரூ. 1,785.62 கோடி மதிப்பீட்டில், ஏரிகள், வரத்துக் கால்வாய்கள், அணைக்கட்டுகள் ஆகியவற்றைப் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதல் மற்றும் இரண்டாம் கட்டப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டத்தில் 15 உபவடி நிலங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மூன்றாம் மற்றும் நான்காம் கட்டங்களில் மீதமுள்ள 21 உபவடி நிலங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*2011-2012 ஆம் நிதி ஆண்டில் 315 ஏரிகள், 70 அணைக்கட்டுகள் மற்றும் 726.19 கி.மீ. நீளம் வரத்துக் கால்வாய்களில் புனரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2012-2013 ஆம் நிதி ஆண்டில் 757 ஏரிகள், 132 அணைக்கட்டுகள் மற்றும் 1,331.14 கி.மீ நீளமுள்ள வரத்துக் கால்வாய்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.*



2013 அக்டோபர் 28]

**2. நபார்டு நிதியுதவித் திட்டங்கள்**

*ஆறுகளில் வெள்ளத் தடுப்புப் பணிகள், ஏரிகள், அணைக்கட்டுகள் மற்றும் வரத்துக் வாய்க்கால்களைப் புனரமைத்தல், புதிய ஏரிகளை அமைத்தல், புதிய அணைக்கட்டுகள் கட்டுதல் போன்ற திட்டங்கள் ஆர்.ஐ.டி.எப். XIII, XV, XVI மற்றும் XVII-ன்கீழ் நடைபெற்று வருகின்றன. இத்திட்டங்களின்கீழ் ரூ. 760.49 கோடி மதிப்பிலான 97 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 66 திட்டங்கள் முடிவுற்றும், 31 திட்டங்கள் நடைபெற்றும் வருகின்றன. நபார்டு வங்கி 2012-2013 ஆம் ஆண்டில் ஆர்.ஐ.டி.எப். XIII-ல் ரூ. 164.92 கோடி மதிப்பிலான 9 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.*

**3. மாநில நிதிப் பணிகள்**

*மாநில நிதி உதவியின்கீழ் ரூ. 507.01 கோடி மதிப்பிலான பாசனத் திட்டங்களும், நீர் நிலைகளைப் புனரமைப்பு செய்யும் பணிகளும் செயலாக்கத்தில் உள்ளன. இவற்றுள் திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள சமமட்டக் கால்வாயின் தொலைகல் எல்.எஸ். 0/000 கி.மீ முதல் 49/300 கி.மீ. வரை ரூ. 184.50 கோடி மதிப்பில் புனரமைத்தல், ரூ. 18 கோடி மதிப்பில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கஞ்சம்பட்டி ஓடையிலிருந்து வெள்ள நீர்க் கால்வாய் அமைத்தல், சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் சோழவரம், செங்குன்றம், பூண்டி மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகளின் கொள்ளளவினை ரூ. 19.22 கோடி மதிப்பில் அதிகரித்தல் ஆகிய பணிகள் மாநில நிதிமூலம் செயல்படுத்தப்படும் சில முக்கிய திட்டங்களாகும்.*

**4. 13–வது நிதிக் குழுவின் மானிய நிதியுதவித் திட்டம் (2011–2012 முதல் 2014–2015 வரை)**

*மத்திய அரசால் அமைக்கப்பட்ட 13 ஆவது நிதிக் குழு 2011-2012 முதல் 2014-2015 வரையிலான நான்காண்டு காலங்களில் 674 மரபு சார்ந்த நீர்நிலைகளைப் புனரமைக்கும் பணிகளை ரூ. 200.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்புதல் அளித்தது. 2011-2012 ஆம் ஆண்டில் (முதற்கட்டம்), 163 பணிகளை ரூ. 50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதில் 88 பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

[2013 அக்டோபர் 28

மேலும், 2012-2013 முதல் 2014-2015 வரை 511 மரபுசார்ந்த நீர் நிலைகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**5. அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் (DRIP)**

நாட்டின் நீர்நிலைகளில் மிக முக்கிய அணைகளைப் புனரமைக்க அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் 2012-2013 ஆம் ஆண்டு முதல் 6 ஆண்டுகளில், 4 கட்டங்களில், 104 அணைகளைப் புனரமைக்க, ரூ. 745.49 கோடி மதிப்பீட்டில் செயலாக்கப்படவுள்ளது. இதில் 66 நீர்வள ஆதாரத் துறை அணைகள் ரூ. 469.94 கோடி மதிப்பில் புனரமைக்கப்படவுள்ளன. முதற்கட்டத்தில், 20 நீர்வள ஆதாரத் துறை அணைகள் ரூ. 103.27 கோடி மதிப்பில் புனரமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தினை செயல்படுத்த ஏதுவாக, மாநில திட்ட மேலாண்மைப் பிரிவை நிறுவ, அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

**37—**

**பாலத்தில் வாகனங்கள் செல்ல வசதி**

**வினா எண் 17960—திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், வடமலைக்குறிச்சி சாலை மற்றும் கலைஞர் நகருக்கு நடுவே உள்ள பாலத்தின் கீழே இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், வடமலைக்குறிச்சி சாலையிலிருந்து கலைஞர் நகருக்கு செல்ல நான்கு வழிச்சாலையில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலத்தின்கீழ் ஓடும் சத்திரரெட்டியபட்டி கண்மாயின் உபரி நீர் கால்வாயின்மேல் தற்காலிகமாக கிராவல் சாலை அமைக்கப்பட்டு, இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனங்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வெள்ளக் காலங்கள் மற்றும் சத்திரரெட்டியபட்டி கண்மாயிலிருந்து உபரி நீர் தொடர்ச்சியாக வெளியேறும் காலங்களில் பாலத்தின்கீழ் உள்ள சாலையின் வழியாக வாகனங்கள் செல்ல சாத்தியம் இல்லை. மேலும், நீர்நிலைப் புறம்போக்குகளை வேறு காரணத்திற்குப் பயன்படுத்தக் கூடாது என்ற அரசு மற்றும் நீதிமன்ற உத்தரவுகளின்படி, பாலத்தின்கீழே இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் செல்ல வழிவகை செய்ய இயலாது.



2013 அக்டோபர் 28]

**38—**

**தடுப்பணை**

**வினா எண் 19703—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, நல்லூர் பேரூராட்சி, சென்னித் தோட்டம் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, நல்லூர் பேரூராட்சி, சென்னித்தோட்டம் அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட உத்தேசிக்கப்பட்ட இடத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தூரத்தில் குழித்துறை சப்பாத்தில் தடுப்பணை கட்ட ரூ. 645 இலட்சங்களுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பரிசீலனையில் உள்ளது. குழித்துறை சப்பாத்தி தடுப்பணைமூலம் சென்னித் தோட்டம் பகுதிகளுக்கு நிலத்தடி நீர் உயர்ந்து பயன்பெறும் நிலையில் மேற்படி தளத்தில் புதிய தடுப்பணை கட்டும் அவசியம் எழவில்லை.

[2013 அக்டோபர் 28

**39—**

## தடுப்பணை

**வினா எண் 19708—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விளவங்கோடு தொகுதி, முல்லையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, முல்லையாற்றின் குறுக்கே பல்லிகூட்டத்தில் தடுப்பணை கட்ட அணை அமைத்து நெய்யாறு கால்வாயின் கிளை கால்வாயான முல்லையாறு கிளைக்கு திருப்பிவிடும் திட்டத்திற்கு ரூ. 26 கோடிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு பரிசீலனையில் உள்ளது.*

**40—**

## அணையைத் தூர் வாருதல்

**வினா எண் 22396—திரு. ஜே.ஜி பிரின்ஸ்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை அணையைத் தூர் வாரும் பணியைத் தொடங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் அணைகள் புனரமைப்புப் பணிகளுக்கான மதிப்பீட்டில் பேச்சிப்பாறை அணையினைத் தூர் வாரும் பணியும் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது தூர் வாரும் பணியும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.*



2013 அக்டோபர் 28]

**41—**

## புதிய ரக மின்படகு

**வினா எண் 22439—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் புதிய ரக மின்படகு இயக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகள் மிகவும் பாதுகாப்பிற்குட்பட்ட பகுதிகளாகும். இவ்வணைகளில் பொதுப் பணித் துறையின்மூலம் புதிய ரக மின்படகு இயக்க திட்டம் ஏதும் இல்லை.*

**42—**

## நீர்க் கசிவினைச் சீர்செய்தல்

**வினா எண் 24587—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டம், மாம்பழத்து அணையில் நீர்க் கசிவினைச் சீர்செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*கன்னியாகுமரி மாவட்டம், மாம்பழத்து அணையில் இருந்த நீர்க் கசிவு தற்பொழுது சீர் செய்யப்பட்டுள்ளது.*

[2013 அக்டோபர் 28

**43—**

### உபரி நீர்

**வினா எண் 25053—திரு. ந. நஞ்சப்பன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், பாலக்கோடு ஒன்றியம், புலிக்கரை மற்றும் சுற்றுப்புற 14 ஏரிகளுக்கு சின்னாறு அணைமூலம் மழைக்கால உபரி நீரைக் கொண்டுவர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்தில் உள்ள எர்ணஹள்ளி ஏரி, புலிக்கரை ஏரி மற்றும் இதர 12 ஏரிகளுக்கு சின்னாற்றில் மழைக்காலங்களில் வரும் வெள்ள நீரை வழங்க ஜெர்தலாவ் கால்வாய் நெடுகை 5,000 மீட்டரிலிருந்து ஒரு வழங்கு கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தற்போது பரிசீலனையில் உள்ளது.*

**44—**

### புதிய கட்டடம்

**வினா எண் 3938—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, மருதம்பட்டி ஊராட்சி, மருதம்பட்டியிலுள்ள கால்நடை ஆய்வகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, மருதம்பட்டி ஊராட்சி, மருதம்பட்டி கால்நடை கிளை நிலைய கட்டடம் தற்போது வாடகையில்லா கட்டடத்தில் இயங்கி வருகிறது. கால்நடை கிளை நிலையம் கட்ட, இடம் ஒதுக்கீடு பெற்றவுடன் நிரந்தர கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.*



2013 அக்டோபர் 28]

**45—**

### கூடுதல் கட்டடம்

**வினா எண் 5376—திருமதி ஆர். சாந்தி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேந்தமங்கலம் தொகுதி, எருமப்பட்டி ஒன்றியம், பழையபாளையம் கால்நடை மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேந்தமங்கலம் தொகுதி, எருமப்பட்டி ஒன்றியம், பழையபாளையம் கால்நடை கிளை நிலையம், பழையபாளையம் கிராம ஊராட்சியில் வாடகை இல்லா கட்டடத்தில் இயங்கி வந்தது. தற்போது தரம் உயர்த்தப்பட்டு கால்நடை மருந்தகமாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட கால்நடை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் நிறுவுதலும் மேம்படுத்துதலும் (ESVHD) திட்டத்தின்மூலம் 2012-2013 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**46—**

### கட்டடம்

**வினா எண் 9486—டாக்டர் சி. விஜயபாஸ்கர்**: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, குடுமியான்மலை ஊராட்சி, குடுமியான்மலை கால்நடை மருத்துவமனைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதியைச் சேர்ந்த குடுமியான்மலை, கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி* (NABARD) *கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி* (RIDF XVII) *திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வருகிறது.*

**47—**

## வெறிநாய்க் கடி

**வினா எண் 10479—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வெறிநாய்க் கடி நோயின் கடுமையான விளைவுகள் குறித்து போதிய விளம்பரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*தமிழகத்தில் இத்துறையின் கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை மருத்துவமனைகள்மூலம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வெறிநாய் தடுப்பூசி மருந்து ரூ.34.4 இலட்சம் செலவில் 1,23,000 டோஸ் கால்நடைகளுக்கு போடப்பட்டு வருகிறது. மேலும், வெறிநாய்க் கடியினால் கால்நடைகளுக்கு ஏற்படும் நோயின் தாக்கம் மற்றும் கடுமையான விளைவுகள் குறித்த விளம்பரப் பலகைகள் தமிழகத்தில் உள்ள அனைத்து பன்முக மருத்துவமனைகளிலும் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. வெறிநாய்க் கடியினால் மனிதர்களுக்கு ஏற்படும் நோயின் தாக்கம் மற்றும் கடுமையான விளைவுகள் குறித்த விளம்பரம் ஏதும் இத்துறையின்மூலம் செய்யப்படுவதில்லை.*

**48—**

## மருந்து வழங்குதல்

**வினா எண் 21576—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) விளவங்கோடு தொகுதியில் நடமாடும் கால்நடை நோய் கண்டறியும் ஆய்வகம் மலைப் பகுதிகளுக்குச் சென்று கால்நடை நோய் கண்டறிந்து மருந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் இயங்கி வரும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுமூலம் திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நோய் கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையத்தின்மூலம் விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட கிராமங்கள், மலைப் பகுதிகள் மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளுக்கும் நோயின் தன்மையைக் கண்டறிந்து அதற்கான சிகிச்சைப் பணி, சம்பந்தப்பட்ட கால்நடை மருந்தகம்மூலம் செய்யப்பட்டு வருகிறது.*

*(ஆ) கேள்வி எழாது.*

**49—**

## சுற்றுலாத் தலம்

**வினா எண் 1959—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாநகரில் சுற்றுலாத் தலங்கள் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகரில் உள்ள சீலநாயக்கன்பட்டி ஊத்துமலை முருகன் கோயிலில் பக்தர்கள் பயன்பாட்டிற்காக மூன்று சுனை நீர் கிணறுகள் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ளன. மேலும் அங்கு ஏரி மேம்பாட்டிற்கு போதிய நீர் வசதி இல்லை. குரும்பம்பட்டி*

[2013 அக்டோபர் 28

உயிரியல் பூங்கா மேம்பாட்டிற்காக வனத் துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சேலம்—ஆத்தூர் பிரதான சாலையில் உள்ள உடையார்பட்டி, கந்தாஸ்ரமம் தனியார் பராமரிப்பில் உள்ளதால், அங்கு பூங்கா அமைத்து பராமரிக்க இயலாத நிலை உள்ளது.

**50—**

## கட்டமைப்பு வளர்ச்சி

**வினா எண் 17668—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சுற்றுலா மற்றும் புராதன நகர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திருச்சி மாவட்டம், திருவெறும்பூர், திருநெல்வேலி மாவட்டம், பணங்குடி மற்றும் சேலம் மாவட்டம், சங்ககிரி ஆகிய பேரூராட்சிகளில் அடிப்படை கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது பணி முடிவடையும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், திருவெறும்பூர், திருநெல்வேலி மாவட்டம், பணகுடி மற்றும் சேலம் மாவட்டம், சங்ககிரி ஆகிய பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், மாநில அரசு சுற்றுலாத் துறைமூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பின்வரும் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன:*

*(1) திருச்சி மாவட்டம், திருவெறும்பூரில் ரூ. 43,87,854/-ல் திருவெறும்பீஸ்வரர் திருக்கோயில் பகுதியில் சிமெண்ட் சாலை, அமரும் இருக்கைகள், பூங்கா, அலங்கார மின்விளக்கு வசதி ஆகிய பணிகள் செய்து முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.*

*(2) சேலம் மாவட்டம், சங்ககிரி சென்னகேசவப் பெருமாள் திருக்கோயில் பகுதியில் ரூ. 55.00 இலட்சத்தில் அடிப்படை*



2013 அக்டோபர் 28]

*வசதிகளான மின்விளக்கு வசதி, சாலை வசதி, மழைநீர் வடிகால் அமைத்தல் ஆகிய பணிகள் செய்து முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.*

*(3) திருநெல்வேலி மாவட்டம், பணகுடி பேரூராட்சி, குத்திரபாஞ்சான் அருவி பகுதியில் ரூ.111.25 இலட்சம் செலவில் அணுகு சாலை, கழிப்பிட வசதி, உடை மாற்றும் அறை, படித்துறை அமைத்தல் ஆகிய பணிகள் செய்து முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.*

**51—**

## சுற்றுலாத் துறையை மேம்படுத்துதல்

**வினா எண் 22403—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தி சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்க மாவட்டத் தலைநகரில் அலுவலகம் அமைக்கவும், முகவர்களை நியமித்து சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும் அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரமான நாகர்கோவில், கன்னியாகுமரியிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. சர்வதேச சுற்றுலாத் தலமான கன்னியாகுமரிக்கு வருகைபுரியும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் நன்மைக்காக, கன்னியாகுமரியில் சுற்றுலா அலுவலகம் இயங்கி வருகின்றது. இந்த சுற்றுலா அலுவலகத்தின் மூலம், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆலோசனைப்படி, மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலா இடங்களை மேம்படுத்தும் பொருட்டு, திட்ட மதிப்பீடு மற்றும் கருத்துருக்கள் தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்படுகின்றன. எனவே, கன்னியாகுமரியில் சுற்றுலா அலுவலகம் இயங்கிவரும் நிலையில், 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நாகர்கோவிலில் மேலும் ஒரு சுற்றுலா அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும் சுற்றுலாத் துறைமூலம் முகவர்கள் நியமிக்கப்படுவதில்லை.*

[2013 அக்டோபர் 28

**52—**

## சுற்றுலாத் தலம்

**வினா எண் 24645—திரு. மு. முருகன்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) முதுகுளத்தூர் தொகுதி, சித்தரங்குடி மற்றும் காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயத்தை சுற்றுலாத் தலமாக மாற்ற அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், சித்தரங்குடி பறவைகள் சரணாலயம் மேம்பாட்டிற்காக 2010-2011 ஆம் நிதியாண்டில், மாநில அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ், ரூ. 23.96 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டு, காட்சி விளக்க மையம், கண்காணிப்பு கோபுரம், அணுகுசாலை ஆகிய பணிகள் முடிக்கப்பட்டு, மேலும் தொலைநோக்கிக் கருவி, புகைப்படக் கருவி ஆகியவை வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.*

*காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயத்தில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் கோரி பெறப்பட்டு அடுத்த நிதியாண்டில் பரிசீலிக்கப்படும்.*

**53—**

## சாதிச் சான்றிதழ்

**வினா எண் 16806—திரு. சு. ரவி:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, தணிகைப் போளூர் இருளர் காலனியில் வாழும் பழங்குடியினருக்கு சாதிச் சான்றிதழ் உடனடியாக வழங்கிட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2013 அக்டோபர் 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பழங்குடியின மக்களிடமிருந்து சாதிச் சான்று வழங்கக் கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் வருவாய் கோட்டாட்சியரின்மூலம் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு 15 நாட்களுக்குள் பழங்குடியின சாதிச் சான்று வழங்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அரசால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அம்மக்களுக்கான சாதிச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், பழங்குடியின மக்களுக்கான சாதிச் சான்றுகள் விரைவாக வழங்கிட அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் வருவாய்த் துறையின் கடிதம் எண்* 45780/RA3 *(2) 2012, நாள் 28-12-2012 மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

**54—**

## இலவச வீடுகள்

**வினா எண் 22055—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராமநாதபுரம் மாவட்டம், பட்டிணம்காத்தான் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு இழப்பீடு வழங்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*இராமநாதபுரம் மாவட்டம், பட்டிணம்காத்தான் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை ரூ.22,08,571/- ஒப்பளிப்பு செய்து அரசாணை (ப) எண் 421, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (நி.எ-1) துறை, நாள் 26-09-2012-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.*

**55—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 22770—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சங்ககிரி தொகுதியில் வீடுகள் இல்லாத ஆதி திராவிடர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*சங்ககிரி தொகுதியில் வீடு இல்லாத ஆதி திராவிடர் இன மக்களைக் கண்டறிந்து அவர்களுக்கு நில எடுப்பு செய்து இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**56—**

## உதவித் தொகை

**வினா எண் 27582—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்**: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 6 ஆம் வகுப்பு படிக்கும் 30,000/- ஆதி திராவிடர் பெண் குழந்தைகள் உதவித் தொகைத் திட்டத்தின் ஆண்டொன்றிற்கு ரூ. 12,000/- ,மாதம் ரூ. 1,000/- வீதம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசாணை (3ப) எண் 23, ஆதி (ம) பந. துறை நாள் 2-7-2010-ல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகள் தொடர்ந்து கல்வி பயிலும் எண்ணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை தொடர்ந்து கல்வி பயிலும், கல்வி நிலையில் பின்தங்கிய தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், விருதுநகர், திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர்,*





*பெரம்பலூர், கரூர், திருச்சி, நாகபட்டினம், சேலம், நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் பயிலும் கிராமப்புற ஆதி திராவிடர் மாணவியர்களுக்கும் மற்றும் பழங்குடியின மாணவிகளைப் பொறுத்தவரை சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களிலும் மாதம் ஒன்றிற்கு ரூ.50/- வீதம் அக்கல்வியாண்டின் பத்து மாதங்களுக்கான கல்வித் உதவித் தொகை அக்கல்வி ஆண்டு முடிவில் ரூ. 500/- என இத்திட்டத்திற்கு ரூ. 4.00 கோடியும் மற்றும் 6 ஆம் வகுப்பு முதல் தொடர்ந்து கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களிலும் மாணவியர் ஒருவருக்கு மாதம் ரூ. 100/- வீதம் அக்கல்வியாண்டின் பத்து மாதங்களுக்கான கல்வி உதவித் தொகை ரூ. 1,000/-ம் என இத்திட்டத்திற்கு ரூ. 4.00 கோடியும், ஆக மொத்தம் ரூ. 8.00 கோடி 2010-2011 ஆம் ஆண்டில் ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. அரசாணை (3ப) எண் 40, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 25-08-2011-ல் தமிழகத்தில், சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை தொடர்ந்து அனைத்துப் பள்ளிகளிலும் கல்வி பயிலும் (பொது பள்ளிகளையும் சேர்த்து) ஆதி திராவிடர்/ பழங்குடியின மாணவிகளுக்கு ஒவ்வொரு ஆண்டு முடிவிலும், மாதம் ரூ. 50 வீதம் 10 மாதங்களுக்கு ரூ. 500/- என 4,76,688 மாணவிகளுக்கு ரூ. 2,383.44 இலட்சமும் (ரூ. 23.83 கோடி) மற்றும் ஆறாம் வகுப்பு கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ. 100/- வீதம் 10 மாதங்களுக்கு ரூ. 1,000/- என 1,61,664 மாணவிகளுக்கு ரூ. 1,616.64 இலட்சம் (ரூ. 16.17 கோடி) ஆக மொத்தம் ரூ. 4,000.08 இலட்சமும் (40.08 கோடி) ஊக்கத் தொகையாக ஆணையர் ஆதி திராவிடர் நலம் வழியாக வழங்கி அரசு ஆணைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.*

**57—**

## உதவித் தொகை

**வினா எண் 27588—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்**: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தூய்மையற்ற தொழில் புரிவோர் குழந்தைகளுக்கு வழங்கும் உதவித் தொகையினை ஆண்டொன்றிற்கு ரூ. 50,000/-ஆக வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2013 அக்டோபர் 28

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தூய்மையற்ற தொழில் புரிவோர் குழந்தைகளுக்கான* Pre Matric *கல்வி உதவித் தொகை திட்டமானது மத்திய அரசினால் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தூய்மைப் பணிபுரிவோரின் குழந்தைகளுக்கு அவர்களது சாதி, மதம் மற்றும் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பினைக் கணக்கில் கொள்ளாமல் உதவித் தொகை மற்றும் சிறப்பு மானியம் கீழ்வருமாறு வழங்கப்படுகிறது:*

| | உதவித் தொகை (ஒவ்வொரு மாதமும், 10 மாதங்களுக்கு) | சிறப்பு மானியம் (ஆண்டிற்கு) |
|---|---|---|
| விடுதியில் தங்காது கல்வி பயிலும் மாணவ/மாணவியர்க்கு | ரூ.110 (1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை) | ரூ.750 |
| விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியர்க்கு | ரூ.700 (3 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை) | ரூ.1,000 |

**58—**

## போக்குவரத்து நெரிசலைத் தடுத்தல்

**வினா எண் 9980—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் போக்குவரத்து நெரிசலைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2013 அக்டோபர் 28]

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்றத் தொகுதி, இளையான்குடி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தினமும் 8.00 மணி முதல் பகல் 13.00 மணி வரையிலும், மதியம் 14.00 மணி முதல் இரவு 21.00 மணி வரையிலும், தொடர்ந்து ஒரு சிறப்பு சார் ஆய்வாளர் மற்றும் இரண்டு காவலர்களை நியமித்து பொது மக்களுக்கு எவ்வித இடையூறின்றி போக்குவரத்து நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

*மேலும், இளையான்குடி பேரூராட்சி எல்லைக்கு உட்பட்ட சாலைகள் அனைத்தும் குறுகலாகவும், அதிக வளைவுகளுடன் கூடியதாகவும் உள்ளதால் சுற்றுப் புற கிராமங்களில் இருந்து வரும் பொது மக்கள் அனைவரும் தாங்கள் வரும் இருசக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்களையும், வர்த்தக நிறுவனங்களுக்கு பொருட்களை ஏற்றி வரும் வாகனங்களையும் சாலையின் இருபுறமும் நிறுத்திவிட்டுச் செல்வதால், நகருக்குள் போக்குவரத்து இடையூறு ஏற்பட்டு வந்தது. தற்போது சரக்கு வாகனங்கள் மற்றும் நகருக்குள் தேவையற்று வரும் வாகனங்களைத் தவிர்க்கும் பொருட்டு, புறவழிச் சாலை அமைக்கப்பட்டு வாகனங்கள் நெரிசல் குறைக்கப்பட்டு தற்சமயம் சீரான போக்குவரத்து நடைபெற்று வருகிறது.*

**59—**

## நடவடிக்கை

**வினா எண் 16431—திரு. ம. குணசேகரன்**: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, மேல்கரையில் மாலை நேரம் சாலையில் இரு சக்கர வாகனங்களை நிறுத்துவோர்மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை காவல் நிலைய சரகம், மானாமதுரை தொகுதி, மானாமதுரை மேல்கரை பேரூராட்சி அலுவலகம் முன்பு, போக்குவரத்துக்கு இடைஞ்சலாக மாலை நேரங்களில் இரு சக்கர வாகனங்களை நிறுத்துவோர் மீது, சட்டப்படியான வாகன மட்ட வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. மேலும், மேற்படி இடத்தில் வாகனங்களை நிறுத்தாமல் இருப்பதற்காக,* “No Parking” *பெயர் பலகை வைக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*மேலும், மானாமதுரை, தேவர் சிலை முதல் பேரூராட்சி அலுவலகம் வரை காலை மற்றும் மாலை நேரங்களில் காவலர்களை ரோந்து அனுப்பி போக்குவரத்து ஒழுங்குபடுத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.*

**60—**

## இலவச பயண அட்டை

**வினா எண் 17233—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கு இலவச பயண அட்டை வழங்கிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கு, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவச பயண அட்டை வழங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*





**61—**

## நகரப் பேருந்து வசதி

**வினா எண் 17966—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டையிலிருந்து குடிகாத்தான்பட்டி வழியாக காரைக்குடிக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தேவக்கோட்டையிலிருந்து குடிகாடு வழியாக காரைக்குடி வரை உள்ள வழித்தட தூரம் நகரப் பேருந்து இயக்குவதற்கு அனுமதிக்கப்பட்டதை விட கூடுதலாக இருப்பதால், இவ்வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.*

**62—**

## போக்குவரத்துக் காவலர்

**வினா எண் 21701—திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெரம்பூர் தொகுதி, டாக்டர் அம்பேத்கர் கலைக் கல்லூரி எதிரில் சிக்னலை முறைப்படுத்தி நிரந்தரமாக போக்குவரத்துக் காவலரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி, வியாசர்பாடி போக்குவரத்து சரக எல்லைக்குட்பட்ட டாக்டர் அம்பேத்கர் கலைக் கல்லூரி எதிரில் உள்ள தானியங்கி கேபிள் பழுது*

[2013 அக்டோபர் 28

*சரிபார்க்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. தற்போது மேம்பாலப் பணி நடைபெற்று வருவதால், வாகனங்கள் அதிகமாக வரும் நேரங்களில் எருக்கஞ்சேரி சாலையிலிருந்து எம்.கே.பி. நகர், சத்தியமூர்த்தி சாலை வழியாகத் திருப்பி விடப்படுவதால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை சரிசெய்யும் பொருட்டு, சிறிது நேரம் தானியங்கி விளக்குகள் நிறுத்தி வைக்கப்பட்டு நெரிசல் குறைந்தவுடன் மீண்டும் இயக்கப்படுகின்றன.*

*மேற்கண்ட இடத்தில் காலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை இரண்டு போக்குவரத்துக் காவலர்கள் நியமிக்கப்பட்டு போக்குவரத்து சீர் செய்யப்பட்டு வருகிறது.*

**63—**

**பணிமனையில் அடிப்படை வசதி**

**வினா எண் 21720—திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெரம்பூர் தொகுதி, மகாகவி பாரதியார் நகர் பணிமனையில் சாலை வசதி, மதில்சுவர், விளக்கு வசதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெறப்பட்டால் பெரம்பூர் தொகுதி, மகாகவி பாரதியார் நகர் பணிமனையில் சாலை வசதி, மதில்சுவர், விளக்கு வசதிகள் செய்து தர உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**64—**

**இலவச பயணம்**

**வினா எண் 21852—திரு. சு. மாதேஸ்வரன்**: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2013 அக்டோபர் 28]

*மருத்துவப் பரிசோதனைக்குச் செல்லும் மகப்பேறுற்ற பெண்கள் பேருந்தில் இலவசமாகப் பயணிக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*மருத்துவப் பரிசோதனைக்குச் செல்லும் மகப்பேறுற்ற பெண்கள், அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணிக்க வகை செய்யும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

**65—**

**விபத்துகளைத் தவிர்த்தல்**

**வினா எண் 24010—திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மன்னார்குடி பெரிய கடை வீதியில் பெரியார் சிலையிலிருந்து பந்தலடி பகுதி வரை கனரக வாகனங்கள் செல்ல தடை விதித்து விபத்துகளைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி பெரிய கடை வீதியில் பெரியார் சிலையிலிருந்து பந்தலடி பகுதி வரை காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் இரவு 09.00 மணி வரையிலும் கனரக வாகனங்கள் செல்லக்கூடாது என தடை விதித்து கீழ்க்கண்ட 5 இடங்களில் அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டுள்ளது:*

1. *வீரா ரெடிமேடு ஸ்டோர் வாசல்*
2. *தாமரைக்குளம் மேல் கரை*
3. *அரிசிக் கடை சந்து*
4. *கம்மாலத் தெரு*
5. *பந்தலடி*

[2013 அக்டோபர் 28

மேற்கண்ட அறிவிப்புகளை மீறி செல்பவர்கள்மீது மோட்டார் வாகன சட்டத்தின்கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேற்கண்ட இடத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் வாகன விபத்து ஏதும் நடைபெறவில்லை.

**66—**

**விலையில்லா பொருள்கள்**

**வினா எண் 29854—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகம் முழுவதும் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி ஆகியவற்றை அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 30-6-2011 அன்றைய நிலையில், அரிசிபெற தகுதியான குடும்ப அட்டை பெற்றுள்ள அனைத்துக் குடும்பங்களில் உள்ள மகளிருக்கு, தமிழகம் முழுவதும் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி ஆகியவை வழங்க தமிழக அரசால் ஆவன செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் 3-6-2011 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிற அட்டைதாரர்களுக்கு வழங்கும் திட்டம் ஏதும் அரசின் கவனத்தில் இல்லை.

**67—**

**தடுப்புச் சுவர்**

**வினா எண் 17708—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி, சாக்கோட்டை, தேவகோட்டை ஆகிய ஒன்றியங்களிலுள்ள கோயில் குளங்களைத் தூர் வாரி, முள்வேலி அமைத்து தடுப்புச் சுவர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*



2013 அக்டோபர் 28]

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியத்தில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள சிவகங்கை சமஸ்தானத்திற்குட்பட்ட திருக்கோயில்களில் திருக்குளங்கள் ஏதுமில்லை.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதிக்குட்பட்ட சாக்கோட்டை ஒன்றியம், திருத்தங்கூர், அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், தேவகோட்டை ஒன்றியம், அருள்மிகு சன்னவனசுவாமி திருக்கோயில் மற்றும் அமராவதிபுதூர், அருள்மிகு வந்தருளீஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்கள் சிவகங்கை சமஸ்தான நிருவாகத்திற்குட்பட்ட பரம்பரை அறங்காவலர்களால் நிருவகிக்கப்பட்டு வரப்பெறும் திருக்கோயில்களாகும். இத்திருக்கோயில்களின் திருக்குளங்கள் மட்டும் சீரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இக்குளங்களைச் செப்பனிட திருக்கோயில் நிருவாகத்தில் போதுமான நிதி வசதியில்லாததால், பொது மக்கள் மற்றும் அரசு நிதியுதவியுடன் சீரமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**68—**

**வீட்டுமனைப் பட்டா**

**வினா எண் 10860—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், சங்கராமநல்லூர் (வடக்கு) மந்தை புறம்போக்கிலுள்ள காலி இடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், சங்கராமநல்லூர் (வடக்கு) மடத்தூர் கிராமம், க.ச. 373/1, புலமானது கிராமக் கணக்குகளில் மந்தை என தாக்கலாகி உள்ளது. மேலும், மந்தைப் புறம்போக்கு போன்ற மேய்க்கால் இடங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு தடையாணை அமலில் இருப்பதால் பட்டா வழங்க இயலாது.*

**69—**

## பட்டா

**வினா எண் 16369—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், கோதண்டராமபுரம் ஊராட்சி, குன்னக்குடிப்பட்டிக்கு பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோதண்டராமபுரம் ஊராட்சியில் குன்னக்குடிப்பட்டி (முருகராசுநகர்) புல எண் 1 திட்ட விஸ்தீரணம் எக்டேர் 127.97.5 ஏர்ஸ் மேஜர் இனாமாக இருப்பதால் அரசு விதிமுறைகளின்படி வீட்டுமனைப் பட்டா வழங்க வழியில்லை.*

**70—**

## சாதிச் சான்றிதழ்

**வினா எண் 18221—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், பாளைய ஏகாம்பரநல்லூரில் உள்ள கல் உடைக்கும் போயர் இன மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், அய்யம்பாளையம் மதுரா பாளைய ஏகாம்பரநல்லூரில் போயர் இனத்தைச் சேர்ந்தவர் எவரும் வசிக்கவில்லை. மேலும், சாதிச் சான்றிதழ் கோரி மனு ஏதும் செய்யவில்லை என ஆரணி வட்டாட்சியர் தெரிவித்துள்ளார். மேலும், மேற்படி கிராமத்தைச் சேர்ந்த கணேசன் மகன் சுப்பிரமணி மற்றும் 5 நபர்கள் குறவன் சாதிச் சான்று கோரி மனு செய்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் சொந்த ஊர் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் மற்றும் கோயம்புத்தூர் ஆகும். இவர்கள் பிழைப்பைத் தேடி 25 வருடங்களுக்கு முன்பு பாளைய ஏகாம்பரநல்லூர் கிராமத்திற்கு வந்து கல் உடைக்கும் தொழில் செய்து வருகின்றனர். இந்த கிராமத்தில் மொத்தம் 11 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை. இவர்களுக்கு குறவன் சாதிச் சான்று ஏதும் வழங்கப்படவில்லை. இவர்கள் அனைவரும் தருமபுரி மாவட்டம், மேற்படி கிராமத்தில் சாதிச் சான்று பெற்றுக் கொள்ளுமாறு கடிதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

**71—**

## அரசுத் துறை நிகழ்ச்சியைத் தவிர்த்தல்

**வினா எண் 19860—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, மனுநீதி நாள் மற்றும் அரசுத் துறை நிகழ்ச்சிகளை சட்டமன்றக் கூட்டத்தொடர் நடக்கும் நாட்களில் நடத்துவதைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நடப்பு ஆண்டில் வட்டத்திற்கான மனு நீதி நாள் மற்றும் அரசுத் துறை நிகழ்ச்சிகள் ஆகியவை நடைபெறும் நாட்கள் முந்தைய ஆண்டின் இறுதியிலேயே திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முடிவு செய்யப்பட்டு விடுகின்றன.

**72—**

## பட்டா

**வினா எண் 21774—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், அமராவதிபுதூர் காந்தி நகரில் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி வட்டம், அமராவதி குரூப் காந்தி நகர் மக்களுக்கு தேவகோட்டை தனி வட்டாட்சியர் (ஆதி திராவிடர் நலம்) மூலம் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

**73—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 22603—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, புதுவயல் பேரூராட்சி, முத்தப்பா பூங்கா பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி வட்டம், சாக்கோட்டை உள்வட்டம், புதுவயல் பேரூராட்சிக்கு உட்பட்ட முத்தப்பா பகுதியானது, பாலையூர் வருவாய்க் கிராமம் புல எண். 177/1, பரப்பு 3.18.0 எக்டேர் நிலம் கிராமக் கணக்குகளில் நத்தம் நில வரி (Ground Rent) என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நகராட்சிக்கு உட்பட்ட நத்தம் நில வரி புலத்தில் பட்டா வழங்குவது தொடர்பான பணி தற்பொழுது நடைமுறையில் இல்லை என்பதால், முத்தப்பா பூங்கா பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகை இல்லை.

**74—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 22604—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், அரியக்குடி பஞ்சாயத்திற்குட்பட்ட சர்வே எண் 28/1இல் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி வட்டம், சாக்கோட்டை உள் வட்டம், அரியக்குடி பஞ்சாயத்திற்குட்பட்ட புல எண் 28/1 பரப்பு 42.56.5 எக்டேர் நிலம் கிராமக் கணக்குகளில் அரியக்குடி கண்மாய் என பதிவாகி உள்ளது. நீர்நிலைப் புறம்போக்கு இனங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க நீதிமன்றத் தடை உத்தரவு அமலில் இருப்பதாலும், நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி நீர்நிலைப் புறம்போக்கு இனங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க தடை இருப்பதாலும், அரியக்குடி கண்மாய் பகுதி என பதிவாகி இருக்கும் சர்வே எண் 28/1இல் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகை இல்லை.

[2013 அக்டோபர் 28

**75—**

## சாதிச் சான்றிதழ்

**வினா எண் 26560—திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், எடக் கீழையூர் ஊராட்சி, வடக்கு உடையார் தெருவில் வசித்து வரும் இருளர்கள் குடும்பத்திற்கு சாதிச் சான்றிதழ் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி வட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், எடக் கீழையூர் ஊராட்சி கிராமத்தில் பம்பாளியர் தெரு மற்றும் வடக்கு உடையார் தெரு ஆகிய பகுதிகளில் சுமார் 40 குடும்பத்சை சேர்ந்தவர்கள் அனைவரும் அங்கேயே பிறந்து வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் சிறிய ஓலைக் குடிசை வீட்டில் வசித்துக் கொண்டு விவசாயக் கூலி வேலை செய்வதன்மூலம் ஜீவனம் செய்து வருகிறார்கள். மேலும், இவர்கள் பொதுவாக விவசாயக் கூலி வேலை செய்வதைப் பிரதான தொழிலாக செய்து வாழ்ந்து வருகிறார்கள். தற்போது வாழ்ந்துவரும் இவர்களின் முன்னோர்கள், அதாவது ஒருதலைமுறைக்கு முற்பட்டவர்கள் தற்போதைய அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த உடையார்பாளையம் பகுதியிலிருந்து பிழைப்பிற்காக இங்கு வந்து குடியேறி நிரந்தரமாகத் தங்கிவிட்டார்கள். அக்குடும்பத்தைச் சார்ந்தவர்களில் சிலர் தாங்கள் மிகவும் பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்த இந்து அம்பலக்காரர் சாதியைச் சார்ந்தவர்கள் என தெரிவித்து சாதிச் சான்றிதழ்கள் பெற்றுள்ளார்கள். மேலும், அவர்கள் அனைவரும் பொதுவாக விவசாயக் கூலி வேலை செய்வதன்மூலம் ஜீவனம் செய்து வருகிறார்கள். இவர்களில் யாரும் “இருளர்” இன மக்களின் சமூகப் பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்கவில்லை. எனவே, இந்தக் குடும்பத்தினர் இருளர் சாதியினைச் சார்ந்தவர்கள் எனத் தெரிவித்து சாதிச் சான்றிதழ் வழங்கிட இயலாது. மாறாக இவர்கள் அனைவரும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த “அம்பலக்காரர்” சாதியினைச் சார்ந்தவர்கள் ஆவார்கள் என்று விசாரணையின் அடிப்படையில் கண்டறியப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.



2013 அக்டோபர் 28]

**76—**

## நடவடிக்கை பற்றிய தகவல்

**வினா எண் 28311—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட ஆட்சியாளரின் மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும் புகார்களுக்கு அதைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை பற்றிய தகவல்கள், மறு பதிலாக தெரிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் பெறப்படும் மனுக்களுக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது. அம்மனுவின்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையைப் பற்றிய தகவல்கள் மனுதாரருக்குத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், மாவட்ட ஆட்சியாளரின் மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும் புகார்களுக்கு ஒப்புதல் அனுப்பப்படுவதில்லை. இனிவரும் காலங்களில் அவ்வாறு ஒப்புதல் அளிக்குமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்படும்.

**77—**

## மேல்நிலைப் பள்ளியை அரசு ஏற்றல்

**வினா எண் 4193—திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 28

*(அ) சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலைக்குச் சொந்தமான மேல்நிலைப் பள்ளியை அரசே ஏற்று நடத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மதுரை மாவட்டம், பாண்டியராஜபுரம், உதவிபெறும் மதுரை சர்க்கரை ஆலை மேல்நிலைப் பள்ளியை அரசு ஏற்று நடத்த அரசாணை (நிலை) எண் 154, பள்ளிக் கல்வி (டி1)த் துறை, நாள் 26-6-2012-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.*

*(ஆ) வினா எழவில்லை.*

**78—**

### அரசு ஊதியம்

**வினா எண் 12887—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசு உதவிபெறும் தனியார் பள்ளிக் கல்வி நிறுவனங்களில் அரசு ஊதியமில்லாது பணிபுரியும் ஆசிரியர் மற்றும் பணியாளர்களுக்கு அரசு ஊதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களில் பணிபுரியும் தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு நடைமுறையிலுள்ள விதிகளின்படி அரசு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. புதிதாக காலியேற்படும் ஆசிரியரல்லாத காவலர், துப்புரவாளர், பெருக்குபவர் மற்றும் துப்புரவாளர் மற்றும் பெருக்குபவர் ஆகிய பணியிடங்களைப் பொறுத்தவரை, இதற்கான செலவினை அந்தந்தப் பள்ளி நிருவாகங்களே ஏற்று வெளியாட்களைக் கொண்டு* (out sourcing) *பள்ளி நிருவாகங்களால் நிரப்பிக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.*



2013 அக்டோபர் 28]

**79—**

### விலையில்லாத மிதிவண்டி, மடிக்கணினி வழங்குதல்

**வினா எண் 14675—திரு. அ. அஸ்லம் பாஷா:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளில் சுயநிதி வகுப்பு மாணவர்களுக்கு விலையில்லாத மிதிவண்டி, மடிக்கணினி வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*தற்போது அரசு உதவிபெறும் பள்ளி மற்றும் அரசு நிதி உதவிபெறும் சுயநிதி அடிப்படையில் நடைபெறும் 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி விநியோகம் செய்யப்படுகிறது. அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளில் சுயநிதி வகுப்பு மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படுவதில்லை.*

**80—**

### தடையில்லாச் சான்று

**வினா எண் 15245—திருமதி ம. சக்தி:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு வழங்கப்படும் சுகாதாரச் சான்று மற்றும் தடையில்லாச் சான்றுகளை மூன்று வருடங்களுக்கு ஒரு முறை வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2013 அக்டோபர் 28

**விடை—**

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு வழங்கப்படும் சுகாதாரச் சான்றானது தற்போதைய நடைமுறையின்படி ஆண்டுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வருகின்றது. மாணவர்களுக்கான கழிவறை மற்றும் கழிப்பிட வசதிகளின் சுகாதாரத் தன்மை குறித்து, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு, ஆண்டுக்கு ஒரு முறை வழங்குவதால் சுகாதாரச் சீர்கேடுகளைத் தவிர்க்க வாய்ப்புள்ளது. தீயணைப்பு தடையின்மைச் சான்றும் தற்போதைய நடைமுறையின்படி ஆண்டுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வருகின்றது. ஆண்டுக்கு ஒரு முறை இச்சான்றினை வழங்குவதால் பள்ளி வளாகம் சுகாதாரத்துடனும், பாதுகாப்புடனும் அமைந்து அசம்பாவிதங்களைத் தவிர்க்க ஏதுவாக உள்ளது. எனவே, இதனை மூன்றாண்டுகளாக நீட்டிப்பது குறித்து பரிசீலிக்கும் அவசியம் எழவில்லை.

**81—**

**பணியிடங்களை நிரப்புதல்**

**வினா எண் 20533—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அரசு உதவிபெறும் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள ஆசிரியர் பணியிடங்களைப் பொறுத்தவரை, நடைமுறையிலுள்ள விதிகளைப் பின்பற்றி, அந்தந்தப் பள்ளி நிருவாகத்தால் நிரப்பப்பட வேண்டும். ஆசிரியரல்லாத காவலர், துப்புரவாளர், பெருக்குபவர்



2013 அக்டோபர் 28]

மற்றும் துப்புரவாளர் மற்றும் பெருக்குபவர் ஆகிய பணியிடங்களைப் பொறுத்தவரை, இதற்கான செலவினை அந்தந்தப் பள்ளி நிருவாகங்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இப்பணியிடங்களை வெளியாட்களைக் கொண்டு (out sourcing) சம்பந்தப்பட்ட பள்ளி நிருவாகங்களே நிரப்பிக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

**82—**

**தாய் மொழி**

**வினா எண் 22051—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையிலுள்ள சிறுபான்மையின மாணவர்கள் தம் தாய் மொழியைக் கற்றுக் கொள்ளவும், 10 ஆம் வகுப்புத் தேர்வில் சிறுபான்மை மொழி மதிப்பெண் தேர்ச்சிக்காக கணக்கில் எடுத்துக் கொள்ளவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கற்றல் சட்டம் 13/2006—ன்படி தமிழ் மற்றும் ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டிராத மாணவர்கள், அவர்கள் விருப்பப் பாடமாக அவர்களது தாய் மொழியினைக் கற்கலாம். தற்போது சிறுபான்மை மொழியில் பயிலும் மாணவர்களுக்கு பத்தாம் வகுப்பு தேர்வில் மதிப்பெண்கள் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், இச்சட்டம் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால் தற்போது கீழ் வகுப்பில் பயிலும் மாணவர்கள் அடுத்தடுத்த ஆண்டில் பயின்று பத்தாம் வகுப்பு பயிலும்போது சிறுபான்மை மொழி மாணவர்கள் விருப்பப் பாடமாக மட்டுமே சிறுபான்மை மொழியில் பயில்வர். இதனால் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மதிப்பெண்கள் வழங்கும் நிலை இல்லை. எனவே, சிறுபான்மை மொழி பாட மதிப்பெண்களை பத்தாம் வகுப்புத் தேர்ச்சிக்கான கணக்கில் எடுத்துக்கொள்வது அரசின் கொள்கை முடிவுக்கு உட்பட்டது.

[2013 அக்டோபர் 28

**83—**

### அரசு முழு உதவி

**வினா எண் 22072—திரு. ம. முத்துராமலிங்கம்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருமங்கலம் தொகுதி, திருமங்கலத்தில் அல் அமீன் உயர்நிலைப் பள்ளியை அரசு முழு உதவிபெறும் பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1992-1993 ஆம் ஆண்டிற்குப் பின்பு தரம் உயர்த்தப்படும் அனைத்து உயர்நிலைப் பள்ளியும் அரசின் நிதி உதவியின்றி முற்றிலும் சுயநிதி அடிப்படையிலேயே செயல்படும் வகையில் ஆணை வழங்கப்பட்டு வருகிறது. மதுரை மாவட்டம், திருமங்கலம், அல் அமீன் உயர்நிலைப் பள்ளியானது 1-6-1994 முதல் நடுநிலைப் பள்ளியாகவும், 3-6-1996 முதல் உயர்நிலைப் பள்ளியாகவும் அரசின் நிதியுதவியின்றி 6 முதல் 10 வகுப்பு வரை முற்றிலும் சுயநிதி அடிப்படையிலேயே இயங்கி வருகிறது. மேற்படி பள்ளிக்கு அரசால் எவ்வித பணியிடமும் அனுமதிக்கப்படவில்லை. எனவே, மதுரை மாவட்டம், திருமங்கலம் அல் அமீன் உயர்நிலைப் பள்ளியை முழு உதவிபெறும் பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**84—**

### நீள் இருக்கை

**வினா எண் 22544—திருமதி த. இந்திராகாந்தி:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2013 அக்டோபர் 28]

*(அ) துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், ஏ.ஜி.எம். மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக 100 செட் நீள் இருக்கை, சாய்வு மேஜை வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், ஏ.ஜி.எம். மேல்நிலைப் பள்ளியானது அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதிப் பள்ளி என்பதால் இப்பள்ளிக்குத் தேவையான தளவாடச் சாமான்கள் அப்பள்ளி நிருவாகத்தால் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், அரசு உதவிபெறும் பள்ளிகளைப் பொறுத்தவரை, உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பராமரிப்புப் பணிகள், சம்பந்தப்பட்ட பள்ளி நிருவாகங்களால் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பாக அரசு நிதியொதுக்கம் ஏதும் செய்வதில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**85—**

### லிப்கோ அகராதி

**வினா எண் 27568—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தொடக்கப் பள்ளி முதல் மேல்நிலைப் படிப்பு வரையிலான மாணவர்களுக்கு லிப்கோ (ஆங்கிலம்—ஆங்கிலம்—தமிழ்) போன்ற பெரிய வகை அகராதிகளை இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தொடக்கப் பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளி வரையிலான மாணவர்களுக்கு லிப்கோ (ஆங்கிலம்-ஆங்கிலம்-தமிழ்) போன்ற

[2013 அக்டோபர் 28

பெரிய வகை அகராதிகளை இலவசமாக வழங்குதல் குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ) வினா எழாது.*

**86—**

**காணொளி**

**வினா எண் 27603—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தொடக்கப் பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளி வரையிலான பாடப் புத்தகங்களை காணொளி மூலமாக பயிற்றுவிக்கும் முறையை அமல்படுத்தி காணொளி கோப்புகளை இணையதளத்தில் வெளியிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* தொடக்கப் பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளி வரையிலான பாடப் புத்தகங்கள் காணொளி மூலமாக பயிற்றுவிக்கும் முறை தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ) வினா எழாது.*

**87—**

**மேல்நிலைப் பள்ளிக்கு அடிப்படை வசதி**

**வினா எண் 27695—திரு. ம. முத்துராமலிங்கம்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருமங்கலம் தொகுதி, டி.கல்லுப்பட்டி ஒன்றியம், பாப்பநாயக்கன்பட்டியில் அரசு உதவிபெறும் ஸ்ரீகந்தசாமி வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் தரைப் பகுதியைச் செய்ய சீரமைப்பு அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் கட்டடங்கள் கட்டுவது, உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது, கட்டடங்களை சீரமைப்பது ஆகிய பணிகள் அரசால் மேற்கொள்ளப்படுவதில்லை. அந்தந்தப் பள்ளி நிருவாகங்களே இப்பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

*(ஆ) வினா எழவில்லை.*

**88—**

**வெளிநோயாளி பிரிவு**

**வினா எண் 4610—திரு. பி.எல். சுந்தரம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் அரசு மருத்துவமனையின் வெளிநோயாளிகள் பிரிவை மீண்டும் பழைய இடத்திலேயே செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* ஈரோடு மாவட்டம், பழைய சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக் கட்டட வளாகத்தில் பொது மக்களின் நலன் கருதி, நகர ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2013 அக்டோபர் 28

**89—**

## மின்னாக்கி சீரமைத்தல்

**வினா எண் 17060—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அரசு மருத்துவமனையிலுள்ள பழுதான மின்னாக்கியைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அரசு மருத்துவமனையில் உள்ள 3 மின்னாக்கிகளும் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.*

**90—**

## கட்டடப் பணியை விரைந்து முடித்தல்

**வினா எண் 17339—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சைக்கான கட்டடத்தின் பணியை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை அரங்குகளில் (அடுக்குமாடிக் கட்டடம் 2) பணிகள் டிசம்பர் 2011 இறுதியில் முடிக்கப்பட்டன.*



2013 அக்டோபர் 28]

**91—**

## தனிக் கட்டடம்

**வினா எண் 17527—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை அரசு மருத்துவமனையில் நீர் இறைக்க நீரினுள் இயங்கும் மோட்டார் வழங்கவும், அவசர சிகிச்சைப் பிரிவுக்கு தனிக் கட்டடம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை அரசு மருத்துவமனையில் நீர் இறைக்க நீரினுள் இயங்கும் மோட்டார் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. மேலும், இம்மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவும் நல்ல முறையில் இயங்கி வருகிறது.*

**92—**

## சிறப்பு மையக் கட்டடம்

**வினா எண் 17673—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சென்னை, எழும்பூர் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை மற்றும் திருவல்லிக்கேணி கஸ்தூரிபாகாந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை ஆகியவற்றில் மருத்துவமனை சிறப்பு மையக் கட்டடம் கட்டும் பணியைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*சென்னை, எழும்பூர் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் தேசிய ஊரக நல மேம்பாட்டுத் திட்டம்*

மூலமாக பணிகள் நடைபெற்று கட்டடங்கள் முடிவுறும் தருவாயில் உள்ளன. திருவல்லிக்கேணி கஸ்தூரிபாகாந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை கட்டுமானப் பணிகள் நடைபெற்று முடிவுறும் தருவாயில் உள்ளன.

**93—**

## அடுக்குமாடிக் கட்டடம்

**வினா எண் 17678—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் அடுக்குமாடிக் கட்டடம் கட்டும் பணியைத் துவக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் அடுக்குமாடிக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.4,120 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டது. இக்கட்டடம் கட்டும் பணி துவக்கப்பட்டு, கட்டடத்திற்கு வர்ணம் பூச்சு வேலைகளும், மின்தூக்கி அமைக்கும் பணிகளும் நடந்துகொண்டு வருகின்றன. மேற்படி கட்டடத்திற்கு கூடுதலாக திருத்திய நிருவாக அனுமதி குறித்த கருத்துரு மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**94—**

## கல்லூரி கட்டடம்

**வினா எண் 17694—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராமநாதபுரத்தில் அரசு செவிலியர் கல்லூரிக்கு கட்டடம் கட்டும் பணியைத் தொடங்க அரசு முன்வருமா?*





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*இராமநாதபுரத்தில் அரசு செவிலியர் கல்லூரிக்கு கட்டடம் கட்டுவதற்காக ரூ.100 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு, கட்டடம் கட்டும் பணிகள் முன்னரே தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.*

**95—**

## மருத்துவமனையில் மின்னாக்கி

**வினா எண் 20706—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அரசு மருத்துவமனையில் மின்னாக்கி வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அரசு மருத்துவமனையில் தற்போதுள்ள 3 மின்னாக்கிகளும் நல்ல முறையில் இயங்கி வருவதால் மேற்கொண்டு மின்னாக்கி வசதி ஏற்படுத்தித் தரவேண்டிய அவசியம் எழவில்லை.*

**96—**

## குளிர்சாதன பிண வைப்பறையைச் சீரமைத்தல்

**வினா எண் 20715—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை அரசு மருத்துவமனையிலுள்ள குளிர்சாதன பிண வைப்பறையைச் சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அரசு மருத்துவமனையின் பிணவைப்பறையில் பழுதடைந்துள்ள குளிர்சாதன இயந்திரங்களைப் பழுது நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**97—**

## ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இடம்

**வினா எண் 22359—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், வீரை ஊராட்சி, வேலாயுதப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தேவையான இடங்களை வனத் துறையிடமிருந்து பெற அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திரு. ஆர்.எஸ்.எம். மகாதேவன் செட்டியார் அவர்களால் தானமாகக் கொடுக்கப்பட்ட இடத்தில் செயல்பட்டுவரும் வேலாயுதப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையம், சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 30-11-1989 முதல் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்படுகிறது. வேலாயுதப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தமாக 1 ஏக்கர் 5 சென்ட் இடம் உள்ளது. எனவே கூடுதல் நிலம் தேவையில்லை.*





**98—**

## குளிர்சாதனப் பெட்டி

**வினா எண் 22920—திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் பிணவறைக்கு குளிர்சாதனப் பெட்டி அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள பிணவறை ஏற்கெனவே குளிர்சாதன வசதியுடன்தான் செயல்பட்டு வருகிறது. எனவே, இம்மருத்துவமனையின் பிணவறைக்கு குளிர்சாதனப் பெட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

**99—**

## மின்னாக்கியை இயக்குதல்

**வினா எண் 22933—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரியில் மின்னாக்கிக்கு போதுமான அளவு டீசல் வழங்கவும், மின்னாக்கியை (ஜெனரேட்டரை) இயக்கிடவும் அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் தற்போதுள்ள 4 மின்னாக்கிகள் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி மின்னாக்கிகளை மின்சாரத் தடையின்போது இயக்குவதற்கு ஏப்ரல் 2012 முதல் ஆகஸ்ட் 2012 வரை ரூ.9,14,316 எரிபொருளுக்காக செலவு செய்யப்பட்டு, தடங்கலின்றி மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.*

**100—**

**புதிய கட்டடம்**

**வினா எண் 24689—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) புதுக்கோட்டை தலைமை மருத்துவமனை அருகிலுள்ள காலியிடத்தில் புதியதாக கட்டடம் கட்டி மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தலைமை மருத்துவமனையில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பாட்டில் உள்ளதால் புதிய கட்டடங்கள் கட்டவேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.*